E Paper

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஓகஸ்ட் 13 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 190 | Saturday 13 August, 2022 | 13பக்கங்கள் | 40/-

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு

## பாப்பரசரிடமிருந்து 4 கோடி ரூபா நிதியுதவி



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 100,000 யூரோ வழங்க பரிசுத்த பாப்பரசர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

06

## கொழும்பை வந்தடைந்தது பாகிஸ்தான் போர்க்கப்பல்

இலங்கை கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடும்



**சாதிக் ஷிஹான்**

பாகிஸ்தான் கடற்படையின் தைமூர் என்ற போர்க்கப்பல் நேற்று (12) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இக்கப்பல் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும் என்று கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார். நல்லெண்ண விஜயமாக கொழும்பு

06

நெருக்கடிக்கு தீர்வு காண அனைவரது ஒத்துழைப்பு அவசியம்:

## சவால்களுக்கு மத்தியில் நாட்டை பொறுப்பேற்று நடத்தும் ஜனாதிபதி

அவருக்கு கால அவகாசம் வழங்குவது எமது பொறுப்பு

சபையில் அமைச்சர் அலி சப்ரி அறைகூவல்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் இணைந்த முறையான திட்டமிடல் அவசியமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார். நெருக்கடியான காலகட்டத்தில் பாரிய சவால்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

06

நாடு முன்னேற சமூக கட்டமைப்பில் மாற்றம் அவசியம்:

## பிரதமர் பதவிக்கு தமிழ் அல்லது முஸ்லிம் ஒருவரை நியமிக்க வேண்டும்

மனநிலையை மாற்ற வேண்டும் என்கிறார் ரமேஷ் பத்திரண

**லோரன்ஸ் செல்வநாயகம்,**



சமூக கட்டமைப்பில் மாற்றம் ஏற்படும் போதே நாடு முன்னேற்றமடையும் என்றும் நாட்டின் பிரதமர் பதவிக்கு தமிழ்அல்லது முஸ்லிம் ஒருவர் தெரிவு செய்யப்படுவதை மன மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும் அத்தகைய மனநிலை இன்னும் எமது சமூகத்தில் ஏற்படவில்லை என அமைச்சர் ரமேஷ் பத்திரண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு

# மின் கட்டணத்தில் அரசு நிவாரணம் வழங்கும்

தீவிர கவனம் செலுத்தப்படுவதாக அமைச்சர் சுசில் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து குறைந்த வருமானம் பெரும் குடும்பங்கள் உள்ளிட்ட நிவாரணம் பெற தகுதியானவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த:

06

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பாராளுமன்றில் ஒருநாள் விவாதம் நடத்தவும் சந்தர்ப்பம்





கண்டி எசல பெரஹரா, பண்டைய பாரம்பரியங்களைப் பேணி வெற்றிகரமாக நிறைவுபெற்றதைக் குறிக்கும் எசல பெரஹரா சந்தேஷப் பத்திரம், கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து, தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேலவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

## 40 பேரை வலைவீசி தேடிவரும் பொலிஸார் புகைப்படங்களையும் வெளியிட்டனர்

40 புகைப்படங்களும் உள்ளே பக்கம் 12,13 இல்

03

## சுயலாபத்தை கைவிட்டு கனிந்துள்ள சூழலை சாதகமாக பயன்படுத்துங்கள்

தமிழ்க்கட்சித் தலைமைகளுக்கு டக்ளஸ் மீண்டும் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுயலாபம் இல்லாது அறிவார்ந்து சிந்தித்து கனிந்துள்ள சூழலை சரிவரப் பயன்படுத்துமாறு தமிழ் அரசியல் தலைமைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பாக பாராளுமன்றத்தில் (12) விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இன்றைய

06

தோட்டத் தொழிலாளர் தினசரி வேதனம்:

## ஆயிரம் ரூபா சம்பளமே இனி செல்லுபடியாகும்

சட்டத்தரணி இ.தம்பையா தெரிவிப்பு



**அருள் சத்தியநாதன்**

ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை எதிர்த்து பெருந்தோட்ட கம்பனிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த றிட் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதால் 1,000 ரூபா சம்பள உயர்வு செல்லுபடியாகும். எனவே 1,000 ரூபாவை

06

காத்தான்குடி பொலிஸ் பிரிவில்

## தரம் 05 மாணவன் மீது கொடூர தாக்குதல்

ஆசிரியை கைது; அதிபர் தலைமறைவு

**காத்தான்குடி நிருபர்**



காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலையொன்றில் தரம் 5 மாணவன் ஒருவன் கடுமையாகத் தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மாணவனைத் தாக்கிய பாடசாலை அதிபர் தலைமறைவாகியுள்ளதாகவும் உடந்தையாக இருந்த

06

## காலிமுகத்திடல் முழுமையாக வழமை நிலைக்கு திரும்பியது

எஞ்சியிருந்த கூடாரங்கள் நேற்று அகற்றப்பட்டன



கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டு எஞ்சியிருந்த கூடாரங்களும் அகற்றப்பட்டன.

அப்பகுதியில் அகற்றப்படாமல் எஞ்சியிருந்த கூடாரங்களை நேற்று பிற்பகல் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அகற்றியதுடன் போராட்டக் களப் பகுதியில் தங்கியிருந்த மக்களும் வெளியேற்றப்பட்டனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வந்திருந்ததாகவும் தெரியவருகிறது.

போராட்டக்களத்திலிருந்து

06

## TNAஐ விரும்பாதவர்கள் TULFஇல் இணையலாம்

இணைந்து பயணிக்கலாம் என்கிறார் ஆனந்த சங்கரி



தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி இருக்கும் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்கள் விரும்பினால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து பயணிக்கலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு

06

## கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜரான அருட்தந்தை ஜீவந்தவுக்கு பிணை

வெளிநாடு செல்லத்தடை: 26 இல் வழக்கு



கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (12) காலை ஆஜரான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான அருட்தந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மத்திய குற்ற விசாரணை பிரிவினர் முன்வைத்த கோரிக்கையை நீதவான் திலினி கமகே நிராகரித்ததோடு, அருட்தந்தையை 5 இலட்சம் ரூபாவுக்கான இரு சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு அனுமதி வழங்கினார்.

06



## எல்லைதாண்டி மீன்பிடித்த 9 இந்திய மீனவர்கள் கைது!

25 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

03



கெட்டபுலாவில் சீரற்ற காலநிலையால்

## வெள்ளத்தில் காணாமல்போன மூவரில் ஒருவர் சடலமாக மீட்பு

12 நாட்களின் பின் மகாவலி கங்கையில் ஒதுங்கியது

03

## சர்வகட்சி அரசாங்கத்தில் நிபந்தனைகளுடன் இணைவு

TNA தயாராக இருப்பதாக வினோMP பேச்சு



நாடு, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடியான சூழ்நிலையை எதிர்நோக்கும் இந்த காலகட்டத்தில் சர்வ கட்சியின் தேவையை நாங்கள் புரிந்து கொள்கின்றோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து

06

போராட்டம் ஆரம்பித்து 2000 நாட்கள்:

## காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்து 2000 நாட்களை எட்டியுள்ள நேற்றைய தினத்தில் கிளிநொச்சியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்த அந்த போராட்டம்

06

## தானிஷ் அலியுடன் நால்வருக்கு 26வரை விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவு



ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தானிஷ் அலி உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று (12) நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்

06

பயணிகள் சேவையில் ஈடுபடும்

## முச்சக்கர வண்டிகளுக்கு மேலதிகமாக எரிபொருள்

எரிசக்தி அமைச்சு நேற்று அறிவிப்பு



பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்காக தற்போது வழங்கப்படும் எரிபொருள் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டணம் அறவிட்டு பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறு எரிசக்தி அமைச்சு போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## ஆப்கான் கடன் பிரச்சினை பற்றி உலக வங்கி கடும் எச்சரிக்கை




ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்தது தொடக்கம் அந்த நாடு பாரிய மனிதாபிமானப் பிரச்சினை மற்றும் தற்போது உணவு மற்றும் கடன் பிரச்சினையை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் இருப்பதாக உலக வங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"அதிகரிக்கும் கடன் மற்றும் உணவுப் பிரச்சினை பேரழிவுத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். சர்வதேச உதவி மாத்திரமே ஒரே தீர்வாக அமையும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதிய முதலீடுகள் இல்லாதது நாட்டில் பொருளாதார பிரச்சினை அதிகரிப்பதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக இருப்பதாக பல்வேறு ஆய்வுகளை மேற்கோள்காட்டி கூறப்பட்டுள்ளது.

## சீனாவின் குழுவில் இருந்து இரு நாடுகள் வெளியேற்றம்



ஐரோப்பாவின் மத்திய, கிழக்கு நாடுகளுடன் ஈடுபடும் சீனாவின் சிறப்புக் குழுவிலிருந்து எஸ்தோனியாவும் லத்வியாவும் வெளியேறியுள்ளன.

ரஷ்யாவுடன் சீனா கொண்டிருக்கும் நெருக்கமான உறவு, தாய்வான் மீதான சீன இராணுவத்தின் அதிகரிக்கும் நெருக்கடி ஆகியவை தொடர்பிலான அக்கறைகள் இதற்குக் காரணம்.

குழுவிலிருந்து வெளியேறினாலும் சீனாவுடன் ஆக்ககரமான நடைமுறைகேற்ற உறவுகளைக் கொண்டிருக்கத் தொடர்ந்து செயல்பட விருப்பதாக எஸ்தோனியாவும் லத்வியாவும் கூறியுள்ளன.

கடந்த ஆண்டு லித்துவேனியா குழுவிலிருந்து வெளியேறியது.

2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 9 நாடுகளே எஞ்சியுள்ளன.

## தற்கொலைத் தாக்குதலில் நான்கு பாக். வீரர்கள் பலி



வடக்கு வசிரிஸ்தான் மாவட்டத்தின் மிர் அலி பகுதியில் கடந்த செவ்வாயன்று (9) இராணுவ வாகனத் தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் நான்கு பாகிஸ்தான் துருப்பினர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் தலிபான்களின் முன்னணி தளபதி ஒருவர் வீதியோர குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டு சில நாட்களிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கொலைதாரி, அதனை கையாண்டவர் மற்றும் வசதி அளித்தவர்கள் பற்றிய விபரங்களை கண்டுபிடிப்பதற்கு உளவுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# உக்ரைனிய அணுமின் நிலையம் மீது மீண்டும் தாக்குதல்: ஐ.நா எச்சரிக்கை

உக்ரைனின் சபொரிசியா அணுமின் நிலையம் மீது மேலும் ஷெல் குண்டுகள் வீசப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. இது தொடர்பில் ரஷ்யா மற்றும் உக்ரைன் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

ஐரோப்பாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையமாக இருக்கும் இந்த அணு ஆலையின் அலுவலகம் மற்றும் தீயணைப்பு நிலையத்தின் மீது கடந்த வியாழக்கிழமை 10 தடவைகள் தாக்குதல் இடம்பெற்றதாக இரு தரப்பும் குறிப்பிட்டுள்ளன.

நிலைமை குறித்து பேசுவதற்கு அழைக்கப்பட்ட ஐ.நா பாதுகாப்புச் சபை கூட்டத்தில், இது ஆபாயகரமான மணித்தியாலமாக இருந்தது என்று அணு கண்காணிப்பு நிறுவனத்தின் தலைவர் ரபாயேல் கிரோசி எச்சரித்துள்ளார்.

இது பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அணு நிலையத்துக்குச் செல்ல ஐ.நா நிபுணர்களுக்கு உடன் அனுமதி அளிக்கும்படி சீனா மற்றும் அமெரிக்கா அழைப்பு விடுத்தபோதும், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற கோரிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அணு நிலையத்தைச் சூழ இராணுவ தடை வலயம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கா முன்னதாக அழைப்பு விடுத்திருந்தது. "அணு நிலையம் ஒன்றுக்கு அருகில் இடம்பெறும் மோதல்கள் ஆபத்தானது மற்றும் பொறுப்பற்றது" என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் இராணுவ தடை வலயம் ஒரு தேர்வாக அமையாது என்று குறிப்பிட்ட ரஷ்யாவின் ஐ.நா பிரதிநிதி, அது இந்த ஆலை மேலும் ஆத்திரமூட்டல் மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு வழிவகுக்கும் என்று சுட்டிக் காட்டினார்.

மத்திய கிழக்கு உக்ரைனில் இருக்கும் இந்த அணு நிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதி மீது கடந்த வாரமும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றது. அது தொடர்பில் ரஷ்யா மற்றும் உக்ரைன் பரஸ்பரம் குற்றம்சாட்டின.



ரஷ்யா இந்த நிலையத்தை ஒரு இராணுவத் தளமாக மாற்றி இருப்பதாகவும் அங்கிருந்து நடத்தப்படும் தாக்குதல்களுக்கு உக்ரைனியப் படையினால் பதில் தாக்குதல் நடத்த முடியாத நிலை இருப்பதாகவும் உக்ரைன் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கூற்றை ரஷ்யா மறுத்துள்ளது.

உக்ரைன் அணுசக்தி நிறுவனம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், "ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் மீண்டும் ஒருமுறை சபொரிசியா நிலையம் மற்றும் அணு நிலையத்திற்கு அருகாமையில் இருக்கும் பகுதி மீது ஷெல் தாக்குதல் நடத்தி உள்ளனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உருக்கியொட்டற் பகுதிக்கு அருகில் இருக்கும் நிர்வாக அலுவலகம் ஒன்று தாக்கப்பட்டிருப்பதாகவும் பல கதிரியக்க சென்சார்கள் சேதமடைந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அருகில் இருக்கும் புல்வெளிப் பகுதியில் சிறிய தீ ஏற்பட்டபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அணு நிலையத்திற்கு அருகில் இருக்கும் தீயணைப்பு நிலையமும் தாக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் அணுசக்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

## ஆப்கான் தலிபான் ஆதரவு மதத் தலைவர் படுகொலை

தலிபான்களை ஆதரிப்பவரும் பெண் கல்விக்கு ஆதரவானவருமான ஆப்கானின் முன்னணி மதத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.



காபுலில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதல் ஒன்றில் ஷெய்க் ரஹிமுல்லா ஹக்கானி பலியாகியுள்ளார்.

தற்கொலைதாரி தனது செயற்கைக் காலில் மறைத்து வந்த குண்டை வெடிக்கச் செய்தே மதத் தலைவரை கொன்றிருப்பதாக தலிபான் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாமிய அரசுக் குழு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. மதத் தலைவரின் அலுவலகத்துக்குள்ளேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஷெய்க் ஹக்கானி ஆப்கான் தலிபான் அரசுக்கு ஆதரவாக உள்ளார். அவர் ஆப்கான் இஸ்லாமிய அரசு குழுவை விமர்சிக்கும் முன்னணி மதத் தலைவராகவும் உள்ளார்.

கடந்த ஆண்டு தலிபான்கள் ஆப்கானில் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின் அங்கு கொல்லப்பட்ட முக்கிய புள்ளியாக இவர் உள்ளார். ஆப்கானில் சர்ச்சைக்குரிய ஒன்றாக உள்ள பெண் கல்வி தொடர்பில் ஆதரவாக அவர் முன்னதாக பத்வா அல்லது மத ஆணை ஒன்றை பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜோன்சன் அன்ட் ஜோன்சன் பௌடர் விற்பனை நிறுத்தம்

ஜோன்சன் அன்ட் ஜோன்சன், டால்க் என்னும் தாதுப்பொருள் கொண்ட குழந்தைகளுக்கான முகப் பவுடரின் சர்வதேச விற்பனையை அடுத்த ஆண்டு (2023) முதல் நிறுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அவற்றின் விற்பனை நிறுத்தப்பட்டு சுமார் ஈராண்டுகளுக்கும் மேல் ஆகியுள்ள நிலையில் அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முகப் பவுடரில் புற்றுநோயை உண்டாக்கும் தன்மையை அதிகம் கொண்ட ஆஸ்பஸ்டோஸ் எனும் தாதுப்பொருள் கலந்திருப்பதாகப் பலர் அந்நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்துள்ளனர்.

வாடிக்கையாளர்கள், புற்றுநோயிலிருந்து குணமடைந்தோர் ஆகியோரிடமிருந்து சுமார் 38,000 வழக்குகளை எதிர்நோக்குகிறது ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனம்.

எனினும் நிறுவனம் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.




சோள மாவை அடிப்படையாகக் கொண்ட பவுடரை உற்பத்தி செய்யப்போவதாக அது குறிப்பிட்டது.

முகப் பவுடரில் ஆஸ்பஸ்டோஸ் கலந்திருப்பது ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனத்துக்குப் பல்லாண்டுக்கு முன்னரே தெரியுமென ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் 2018ஆம் ஆண்டில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதை நிறுவனம் மறுத்தது. முகப்பவுடரின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பாதுகாப்பானவை என்றும் புற்றுநோயை உண்டாக்குபவை அல்ல என்றும் அது வலியுறுத்தியது.

## சிரியா - சீனா இராணுவ தொடர்புசாதன ஒப்பந்தம்



சிரியாவின் இராணுவ தகவல் தொடர்புசாதனங்கள் வலையமைப்பில் தற்போது நிலவும் இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவையான தகவல் தொடர்புசாதன உபகரணங்களை விநியோகிப்பதற்குரிய ஒப்பந்தமொன்றை சீனாவும் சிரியாவும் மேற்கொண்டுள்ளன. இது தொடர்பில் இஸ்ரேல் கவலையடைந்துள்ளது.

குறிப்பாக இந்த ஒப்பந்தம் குறித்து இஸ்ரேலின் பாதுகாப்பு துறை அதிக கவலை கொண்டுள்ளதோடு, முன்னெச்சரிக்கை சமிக்ஞை மணிகளை அமைப்பதன் மூலம் சிரியாவின் உளவுத்துறை திறன்கள் மேம்பட இவ் உபகரணங்கள் பயன்படும் என்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் தொடர்புசாதன உபகரணத் தயாரிப்புகளின் சரியான தன்மை தெரியாதுள்ள போதிலும், அவை சிரியாவின் இராணுவ தகவல் தொடர்புசாதன வலையமைப்பில் தற்போது காணப்படும் இடைவெளிகளை நிரப்பக்கூடியதாக இருக்கும் என்று ஜே.என்.எஸ். சுட்டிக்காட்டியுள்ளது.

# வங்கியிலுள்ள சேமிப்பை பெற பலரை சிறைவைத்தவர் சரண்

வங்கியில் உள்ள தமது சேமிப்பை மீளப்பெற அனுமதிக்குமாறு கோரி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இருக்கும் வங்கி ஒன்றில் ஆறு மணி நேரம் பணயக்கைதிகளை பிடித்து வைத்திருந்த துப்பாக்கிதாரி சாரணடைந்துள்ளார். இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பெய்ரூட்டின் பரபரப்பான ஹம்ரா மாவட்டத்தில் உள்ள மத்திய வங்கிக்குள் கடந்த வியாழக்கிழமை கைத்துப்பாக்கி மற்றும் பெற்றோலுடன் நுழைந்த 42 வயதான பஸாம் அல் ஷெய்க் ஹுஸைன் என்ற ஆடவர், தமது பணத்தை பெறுவதற்கு அனுமதிக்காவிட்டால் தீக்குளிப்பதாக எச்சரித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு லெபனானில் பொருளாதார நெருக்கடி ஆரம்பித்தது தொடக்கம் லெபனான் வங்கிகளில் முடக்கப்பட்டுள்ள தமது சேமிப்புகளை பெற முடியாத வைப்பாளர்கள் உள்ளூர் வங்கிகளில் தமது கோபத்தை வெளிப்படுத்தும் சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல மணிநேர பேச்சுவார்த்தைக்குப் பின்னர், தமது சேமிப்பில் ஒரு பகுதியை வழங்க வங்கி முன்வந்ததை ஹுஸைன் ஒப்புக்கொண்டார். இதனைத் தொடர்ந்து தாம் பிடித்து வைத்திருந்த ஆறு பணயக் கைதிகளை விடுவித்த அவர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

இந்த ஆடவரின் செயல் பொது மக்களின் ஆதரவை பெற்றதோடு, வங்கிக்கு வெளியில் கூடிய மக்கள், "நீங்களே நாயகன்" என்று கோசம் எழுப்பினர்.

இந்த சந்தேக நபரின் குடும்பத்தினருக்கு அவரது சேமிப்புப் பணம் மிக அவசியமாக இருக்கும் நிலையிலேயே அவர் இந்தச் செயலைச் செய்திருப்பதாக எல்.பி.சி தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

சந்தேக நபரின் சகோதரர் ஊடகவியலாளர்களிடம் கூறியிருப்பதாவது, "வங்கியில் எனது சகோதரருக்கு 210,000 அமெரிக்க டொலர்கள் உள்ளது. மருத்துவ செலவுக்கு 5,500 டொலர்கள் தேவைப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.

தமது உரிமைகளை பெற அனைவரும் இதனைச் செய்ய வேண்டும் என்று வங்கிக்கு வெளியில் இருந்த அவரது மனைவி மற்றும் சகோதரர் தெரிவித்துள்ளார்.



லெபனானில் வங்கிக் கணக்குகளை வங்கிகள் கட்டுப்படுத்துவது குறித்து மக்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர். 2019 இல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வந்தது. பணத்தை வெளிநாட்டுக்கு பரிமாற்றம் செய்வதிலும் அந்த நாட்டில் கட்டுப்பாடு உள்ளது.

லெபனான் தற்போது மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அங்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதோடு மருந்துகள் மற்றும் கோதுமைக்கு தட்டுப்பாடு உள்ளது.

இந்த வங்கிக்கு வெளியில் கூடிய மக்கள் "வங்கிகளின் ஆதிக்கம் ஒழிக" என்று கோசம் எழுப்பினர்.

இதேபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக லெபனான் வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜோர்ஜ் அல் ஹஜ் தெரிவித்துள்ளார். கடந்த ஜனவரியில் இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில், பக்கா பள்ளத்தாக்கில் உள்ள வங்கி ஒன்றில் கோபமடைந்த வாடிக்கையாளர் ஒருவர் பல டஜன் பேரை பணயக் கைதியாக பிடித்து, அமெரிக்க டொலரில் தமது பணத்தை பெற கோரினார்.

லெபனானில் பொருளாதார நெருக்கடி ஆரம்பித்தது தொடக்கம் அந்நாட்டின் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி 90 வீதம் வீழ்ச்சி கண்டது. நாட்டில் ஐந்தில் நான்கு பங்கினர் வறுமையில் வாழ்வதாக ஐ.நா குறிப்பிடுகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2022 ஓகஸ்ட் 13 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

10 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.27 |
| இஷா | 07.40 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 28

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்தமரண யோகம்

திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# கடத்தப்பட்ட சிறுமியை அதிரடியாக மீட்ட STF

**லுணுகல பிரதேசத்தில் சம்பவம் பதிவு**



பதுளை லுனுகல பிரதேசத்தில் கடந்த 3ஆம் திகதி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 14 வயது சிறுமி 8 நாட்களுக்குப் பின்னர் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடத்தப்பட்ட சிறுமி லுனுகல உடகிருவ காட்டுப் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிறுமியை கடத்தியதாக கூறப்படும் 18 மற்றும் 53 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக லுனுகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சிறுமியும் வைத்தியசாலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லுணுகல மற்றும் பேருவளை பிரதேசத்தில் வசிக்கும் 18 வயது மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவை ஐ.அரபு இராச்சியம் வழங்கும்

**தூதுவர் காலித் நாசர் அல்அமெரி அமைச்சர் அலி சப்ரியிடம் உறுதி**



இலங்கை ஐக்கிய அரபு இராச்சிய இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் அல்அமெரி, தற்போதைய சூழலில் இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நாசர் அல்அமெரி வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை அமைச்சில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்காக அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் குறித்து இதன்போது வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி தூதுவருக்கு விளக்கமளித்தார்.

விவசாயம், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் இலங்கையுடன் பரந்த ஒத்துழைப்பில் ஈடுபடுமாறு 06

**காணாமற் போனோரது உறவுகளின் ஆர்ப்பாட்டத்துக்கு 2000 நாட்கள்**

# தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று சபையில் அமைதி ஆர்ப்பாட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் போது காணாமற் போயுள்ளவர்களின் உறவுகள் மேற்கொண்டு வரும் போராட்டத்திற்கு நேற்று வெள்ளிக்கிழமையுடன் 2000 நாட்கள் கடந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சபையில் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெற்ற வேளையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் 'டெலோ' வன்னி மாவட்ட எம்.பி. விநோ நோகராதலிங்கம் உரையாற்றிய போது வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் வெள்ளிக்கிழமையுடன் 2000 நாட்களை கடந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அது தொடர்பில் பல்வேறு விடயங்களையும் அவர் தமது உரையில் முன்வைத்தார்

அதனையடுத்து தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்க எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் 06

# 40 பேரை வலைவீசி தேடிவரும் பொலிஸார்

**புகைப்படங்களையும் வெளியிட்டனர்**



**40 புகைப்படங்களும் பக்கம் 12–13இல்**

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் கடந்த ஜூலை 9 ஆம்திகதி புகுந்து, அங்கிருந்த உடைமைகளுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என, சமூகவலைத்தளங்கள் மற்றும் சிசிரீவி காட்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்ட நபர்களின் புகைப்படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் தொடர்பான தகவல்கள் அறிந்தவர்கள், 0718591559, 0718085585, 0112391358 அல்லது1997 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

தேடப்படும் சந்தேக நபர்களின் புகைப்படங்கள் பக்கம் 12 மற்றும் 13இல் காணலாம்.

# முகநூல் பதிவுகளை வைத்து கொழும்பில் அநாவசிய கைதுகள்

**இத்தகைய நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் - சபையில் மனோ கணேசன் எம்பி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முகநூல் பதிவுகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு அநாவசியமான கைதிகளும் அச்சுறுத்தல்களும் கொழும்பில் இடம்பெறுவதாகவும் உடனடியாக இத்தகைய அநீதியான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் மனோ கணேசன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் இதுவே பொலிசாரின் முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அவர், இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அது தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை வைத்துக்கொண்டு முகநூல் மூலம் படங்கள், தகவல்களை திரட்டி கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் இளைஞர்கள் அநீதியான முறையில் கைது செய்யப்படுகிறார்கள்.

அவ்வாறான இளைஞர்களின் விபரங்கள் பெறப்பட்டு அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றார்கள். இத்தகைய நடவடிக்கைகளை நாம் முற்றாக கண்டிக்கின்றோம்.

மே ஒன்பதாம் திகதி வரை மிகவும் அமைதியான முறையிலேயே ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவர். அந்த ஆர்ப்பாட்டத்தை அவதானித்த சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் இது உலகிற்கே ஒரு 'மொடல்' என வரவேற்றனர்.

ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற பொலிசார் அங்கு பியானோ வாசிப்பதையும் ஜிம் பயிற்சிகளில் ஈடுபடுவதையும் நாம் காண முடிந்தது. அவ்வாறிருக்கையில் சாதாரண மக்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லும் போது இத்தகைய ஆசைகள் வருவது இயல்பே.

அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் தவறானது. நாம் வன்முறையை ஆதரிப்பவர்கள் அல்ல. அந்த வகையில் இத்தகைய அச்சுறுத்தல்கள் கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டும் என கூறப்படுகின்றபோது இத்தகைய செயற்பாடுகள் அதற்கு பங்கமாகவே அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எல்லைதாண்டி மீன்பிடித்த 9 இந்திய மீனவர்கள் கைது!

**25 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு**



சட்டவிரோதமான முறையில் நாட்டின் கடல் எல்லைக்குள் உட்பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 9 மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது, அவர்களை எதிர்வரும் 25ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் மேற்படி மீனவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து 2,137 கிலோகிராம் மீன் கடற்படையினால் கைப்பற்றப்பட்டிருந்தது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தமிழகத்தின் நாகப்பட்டினத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் பொலிஸ் அதிகாரி துப்பாக்கியுடன் கைது

சிறியவகை துப்பாக்கியொன்றை தம்வசம் வைத்திருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் பன்னிப்பிட்டிய மஹல்வராவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, 61 வயதுடைய அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, அவரிடமிருந்து 2 தோட்டாக்கள், 9 மில்லிமீட்டர் ரக 9 தோட்டாக்கள், போலி தேசிய அடையாள அட்டை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் சுகயீனம் காரணமாக 1990ம் ஆண்டு சேவையில் இருந்து விலகியதாக முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அத்தியட்சகராக பிரபாகரன் நியமனம்



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.


மட்டு. சிறைச்சாலை அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல்.விஜயசேக்கர இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட நல்லையா பிராபாகரன் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பதில் அத்தியட்சகர் கே.வர்ணகுலசூரிய, பிரதம ஜெயிலர்.எஸ்.மோகன் ராஜ் உள்ளிட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

**கிழக்கு விவசாயிகள், மீனவர்களுக்கு**

# மண்ணெண்ணெய், எரிபொருளை வழங்க உடன் நடவடிக்கை அவசியம்

**சபையில் ரவூப் ஹக்கீம் எம்பி தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கிழக்கு மாகாண விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு தேவையான எரிபொருளை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் எம்பி நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். அவர் தனது உரையில்,.

கிழக்கு மாகாண விவசாயிகள் அறுவடைக்காக டீசல் இல்லாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு நான்கு இலட்சம் லீற்றர் டீசல் தேவைப்படுகின்றது. ஆனால் ஒரு இலட்சம் லீற்றர் டீசல் அந்த மாகாணத்துக்கு வழங்கப்படுகின்றது. அதனால் உரிய காலத்தில் அவர்களுடைய அறுவடைகளை மேற்கொள்ள முடியாமல் அவர்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.


அதனைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு தேவையான டீசலை விரைவாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணெய்யை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு 40லீற்றர் மண்ணெண்ணெய் 06

**கெட்டபுலாவில் சீரற்ற காலநிலையால்**

# வெள்ளத்தில் காணாமல்போன மூவரில் ஒருவர் சடலமாக மீட்பு

**12 நாட்களின் பின் மகாவலி கங்கையில் ஒதுங்கியது**



நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக நாவலப்பிட்டி, கெட்டபுலா அக்கரவத்தை பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு காணாமல்போன 3 பேரில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 1ம் திகதி குறித்த மூவரும் நீரில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர்.

அவர்களை தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் காணாமல் போனவர்களில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகாவலி ஆற்றின் கம்பளை, மொரகலை பகுதியில் அந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. 3 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதுடன், சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் காணாமல் போன மேலும் இரண்டு பேரை கண்டறிவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இன்று முதல் டீசல் விநியோகம்

**அங்கஜன் எம்.பியின் கோரிக்கை நிறைவேற்றம்**

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு தேவையான உழவுக்கான டீசல் இன்று (13) சனிக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

யாழ். விவசாயிகள் ஆடி மாத உழவுக்காக தங்களது விளை நிலங்களை தயார்ப்படுத்துவதற்கு தேவையான டீசலை உடன் வழங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், துறைசார் அமைச்சர்களிடம் விடுத்த கோரிக்கையின் பயனாகவே இன்று (13) உழவுக்கான டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தில் 2022/23 காலபோக செய்கைக்கு 32,720 ஏக்கர் வயல் நிலங்கள் தயாராகவுள்ளன. இவ் வயல் நிலங்களை உழுது தயார்ப்படுத்த 2,61,760 லீட்டர் டீசல் அவசர தேவையாக இருந்தது. இது தொடர்பாக உரிய திணைக்களங்கள் மற்றும் விவசாயிகள் எனது கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து நான் இது தொடர்பாக உடனடியாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தேன். இதனை யடுத்து யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைக்காக 2,64,000 லீற்றர் டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.73 | 258.44 |
| கனடியன் டொலர் | 276.09 | 289.20 |
| யூரோ | 361.55 | 376.29 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 257.32 | 268.29 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.68 | 449.77 |
| சுவிஸ் பிராங்க் | 369.23 | 386.78 |
| அமெரிக்க டொலர் | 357.22 | 368.54 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 957.32 | கட்டார் ரியால் | 98.04 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 28ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 14

**குறள் தரும் சிந்தனை**



நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற

*தண்ணீரில் இருக்கும் வரையில்தான் முதலைக்குப் பலம்; தண்ணீரை விட்டு வெளியே வந்து விட்டால் ஒரு சாதாரண உயிர் கூட அதனை விரட்டி விடும்.*

# தமிழ்ச் சமூகம் நிரூபிக்க வேண்டிய தருணம் இது!

கடந்த ஒன்பதாம் திகதி கொழும்புக்கு சன வெள்ளத்தைத் திரட்டி வந்து புதிய அரசை உலுக்கி எடுப்பதற்கான முயற்சி வெற்றி பெறாது என்பதற்கான சமிக்ஞைகள் ஏற்கனவே தென்பட்டிருந்த நிலையில், அந்த 'அரகலய' பிசுபிசுத்துப் போனதோடு, வெற்றியின் இலக்கமாகக் கருதப்பட்ட அதே ஒன்பதாம் திகதி காலிமுகத்திடல் போராட்டத்தின் முடிவுரையாகவும் அமைந்தது.

போராட்டம் என்பது நீண்டு செல்லும் ஒன்றல்ல. ஓர் போராட்டத்தின் தேவைகளை சமூக, பொருளாதார சூழல்களே உருவாக்குகின்றன. அதற்கான தேவைகள் குறைந்ததும் போராட்ட வேகம் படிப்படியாகக் குறைந்து மறைந்து விடும். ஆனால் போராட்டத்துக்கான தேவைகளை மறுபடியும் உருவாக்காமல் இருப்பது ஆட்சியாளர்கள் அல்லது நிர்வாகிகளின் கடமை.

இன்றைய அரசியல் சூழலை நிலை மாறும் காலம் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும். மிக மோசமான ஒரு ஆட்சியும் அதன் எதிர்விளைவுகளும் மக்கள் போராட்டத்தை உருவாக்கின. இந்நிலையை மாற்றி மீண்டும் சுபீட்சத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க முடியம் என்பதற்கான யோசனைகளும் உறுதிமொழிகளும் வழங்கப்பட்டதன் அடிப்படையிலேயே போராட்ட உணர்வு படிப்படியாக நீர்த்துப் போனது.

அடுத்த பயணத்துக்கு தயாராவதற்கு காலஅவகாசம் தரலாம் என்ற எண்ணமே இன்று பெரும்பாலான மக்கள் மத்தியில் நிலவுகிறது. இதைத்தான் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, போராட்டம் இப்போது வெளியில் இல்லை, மக்கள் மனதில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இந்த நிலை மாறும் காலம் மிக முக்கியமானது. எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இப்போது எடுக்கக் கூடிய தீர்மானங்கள் மற்றும் வகுக்கப்படக் கூடிய திட்டங்களே தீர்மானிக்கும். இக்காலப்பகுதியில் நடைபெறக் கூடிய பேச்சுவார்த்தைகள் மற்றும் முன்வைக்கப்படும் யோசனைகள் வழமையான தீவிர கட்சி அரசியல் நிலைப்பாடுகளில் இருந்து விலகி நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டியது அவசியம். அப்போதான் கட்சிகள் கூட்டாக நாட்டின் பொதுநலன்களின் பேரில் முடிவுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதற்கு கட்சிகள் விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த வகையில் தமிழ்க் கட்சிகள் எவ்வளவு தூரம் நெகிழ்வுத் தன்மையுடன் நாட்டின் பொதுப் பிரச்சினைகளை அணுகவுள்ளன என்பதை மக்கள் அவதானிக்கவே செய்வார்கள். தமிழர்கள் எப்போதும் விசாலமான பார்வையற்ற, தமது பிரச்சினைகளை மட்டுமே பேசுகின்ற நாட்டின் பொதுவான பிரச்சினைகளில் அக்கறையற்றவர்கள் என்றொரு எண்ணம் பெரும்பான்மை சிங்கள மக்களிடம் உள்ளது. பிரதான சிங்களக் கட்சிகளும் அவ்வாறே கருதுகின்றன. இக்கருத்து, சர்வகட்சி நிர்வாக நடைமுறைத் தொடர்பாக தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்தைகளில் வெளிப்பட்டு விடக் கூடாது என்பது முக்கியம்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய இ.தொ.கா. உறுப்பினர் ஜீவன் தொண்டமான், சர்வகட்சி அரசமைக்க தமது ஒத்துழைப்ப உண்டு என்றும் ஏனைய கட்சிகளும் தமது பங்களிப்பை இச்சமயத்தில் வழங்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் அவரது உரை முன்மாதிரியானதாகவும் நாட்டின் இன்றைய நிலையில் இருந்து மீட்டெடுக்கும் முயற்சி அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் நடைபெற வேண்டியதன் அவசியத்தை குறிப்பதாகவும் அமைந்திருந்தமை பாராட்டுக்குரியது.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் சர்வகட்சி ஆட்சிக்கு ஆதரவு அளிக்கத் தயார் என்று கூறியவர்கள் இன்று ரணில் விக்கிரமசிங்கவும் விலகிச் செல்ல வேண்டும் என்று சொல்வது பொருத்தமற்றது என்றும் நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சகல தரப்பினரும் நாட்டுக்காக சர்வகட்சி அரசில் ஒன்றிணைய வேண்டும், சிறந்த நோக்கங்களுக்காக சர்வகட்சி அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்ற ஜீவன் தொண்டமானின் உரையை சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகளும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனிப்பட்ட நபராகப் பார்ப்பதும் அவர் சார்ந்த கட்சியின் கடந்தகால நடவடிக்கைகளை விமர்சனப் பார்வையுடன் நோக்குவதும் அவற்றை முன்வைத்து சர்வகட்சி நிர்வாகத்தில் பங்களிப்பு செய்ய விரும்பவில்லை என்று கூற முற்படுவதும் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதல்ல என்று மிகச் சரியாக ஜீவன் தொண்டமான் கூறியிருக்கிறார்.

இ.தொ.கா. வெளிப்படையாகவே சர்வகட்சி ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் ஒரே காரணத்துக்காக தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் பங்கெடுக்காது விடுமானால் அது சந்தர்ப்பத்தை நழுவ விடும் உத்தியாக மட்டுமே கருதப்பட முடியும். ஐ.தே.க.வுடன் முரண்பாடு போன்ற தனிப்பட்ட கோபதாபங்களை விட்டுவிட்டு நாடு என்ற அடிப்படையில் இணைந்து பணியாற்ற வேண்டிய நேரம் இது. தமிழ்ச் சமூகங்கள் எப்போதும் எதையாவது கேட்டுக் கொண்டிருக்கும் சமூகங்கள் அல்ல, கை கொடுக்க வேண்டிய தருணத்தில் கைத்தூக்கி விடும் சமூகமும் கூட என்பதை நிரூபிக்க வேண்டிய நேரம் இது.

editor.tkn@lakehouse.lk

# நல்லைக் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு இன்று தெய்வீக திருக்கூட்டத் தொடர் நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுக்கப்பட்டுவரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லைக் கந்தன் உற்சவப் பெருவிழாக் காலத்தினை முன்னிட்ட சிறப்பு நிகழ்வாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையிலே, நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்ட தெய்வீகத் திருக்கூட்டச் சிறப்புத் தொடர் நிகழ்வின் பன்னிரண்டாம் நாள் வைபவம் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின்



சீடர், வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பளை, பிரதேச செயலர் பிரிவின், பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட்டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'வழிபாட்டு நடைமுறைகளை விதிகளாகச் சொல்லிய நாவலர் பெருமான்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் சி.கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், திருமதி. சங்கீதா ரவிசங்கர் மற்றும் திருமதி. ஆரணி பாலச்சந்திரன் ஆகியோரின் சங்கீதக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

நல்லைக் கந்தன் அருளாலே நிகழ்ந்தேறும் இத்தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வினைக் காண வருமாறு அனைவரையும் அன்போடு அழைப்பதாக ஏற்பாட்டாளர்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

**அ.கனகசூரியர்...**

# நாவலப்பிட்டியில் வெள்ளத்தினால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

நாவலப்பிட்டியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காத்தான்குடி வர்த்தக சங்கத்தினால் காத்தான்குடி மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் மற்றும் நிவாரணப் பொருட்கள் என்பவற்றை அண்மையில் நாவலப்பிட்டிநகர் ஜும் ஆ பள்ளிவாயலில் வைத்து நாவலப்பிட்டி பள்ளிவாயல்கள் சம்மேளன பிரதிநிதிகளிடம் காத்தான்குடி வர்த்தக சங்க பிரதிநிதிகள் கையளித்தனர்.

ஒன்பது இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா பணமும், 600 கிலோ அரிசி நூடில்ஸ்,

## காத்தான்குடியில் சேகரிக்கப்பட்ட பணமும் உணவுப் பொருட்களும் நாவலப்பிட்டிநகர் ஜும்ஆ பள்ளிவாயல் நிர்வாகத்திடம் கையளிப்பு





தலையணைகள், குழந்தைகளுக்கான புதிய ஆடைகள், போர்வைகள் மற்றும் நிவாரணப் பொதிகள் என்பன இதன்போது கையளிக்கப்பட்டன. காத்தான்குடி வர்த்தக சங்க தலைவரும் காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான கே.எல். எம். பரீட், வர்த்தக சங்க செயலாளரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான எம்.எம.ஆரிப். வர்த்தக சங்க பொருளாளர் எம்.ஐ.எம்.மக்பூல், ஏ.ஜே. எம்.அஜ்வத், வர்த்தக சங்க உப பொருளாளர் பிரீடம் ரஹீம், மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் இமாம் அஷ்ஷெய்ஹ் பாஸில் முப்தி மற்றும் காத்தான்குடி வர்த்தக சங்க பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இதன் போது நாவலப்பிட்டி ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.முஸம்மில், நாவலப்பிட்டி பள்ளிவாயல்கள் சம்மேளன பிரதிநிதிகள்மற்றும் அனர்த்த குழு பிரதிநிதிகளிடம் சேகரிக்கப்பட்ட நிதியையும் நிவாரணப் பொருட்களையும் காத்தான்குடி வர்த்தக சங்க பிரதிநிதிகள் கையளித்தனர்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

# கதிர்காமத்திலுள்ள ஏழு மலைகளில் வியப்பில் ஆழ்த்தும் விபூதிமலை!

ஏழுமலையான் கதிர்காமக் கந்தன் ஆலயம் என்றால் அனைவருக்கும் கதிரைமலை ஞாபகத்துக்கு வரும். இந்த கதிரைமலையை ஏழுமலை என்றும் அழைப்பர்.

உண்மையில் அங்கு ஏழு மலைகள் உள்ளன. கதிர்காமத்தைச் சுற்றியுள்ள ஏழு மலைகளும் ஏழு வகையான மகத்துவம் வாய்ந்தவை. அதில் கதிரமலைக்கு மட்டுமே எல்லோரும் செல்வதற்கு அனுமதி உண்டு.

அது தவிர வள்ளிமலை, தெய்வானை மலை, இடும்பன்மலை, நாகமலை, பச்சை மலை, கழுகுமலை மற்றும் விபூதிமலை ஆகிய மலைகளுடன் சேர்ந்து ஏழுமலைகளின் அதிசய சக்தி கதிர்காமம் மண்ணை காலம் காலமாக இயக்குகிறது.

இந்த ஏழுமலைகளில் விபூதிமலை பற்றி இம்முறை அறியக் கூடியதாக இருந்தது. இது மிகவும் சிறப்பான தன்மை வாய்ந்தது.

கதிர்காமத்தில் இருந்து கித்துளபவ வழியாக சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இவ் விபூதிமலை அமைந்துள்ளது.

விபூதிமலையில் ஆடி மாதத்தில் திருவிழா காலங்களில் மட்டும் இயற்கையாக உற்பத்தியாகும் விபூதியே இங்கு பிரசாதமாக இன்றுவரை வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட வம்சத்தினரே இன்றுவரை இங்கு திருநீறு எடுக்கின்றனர்.





இவ்விபூதிமலைக்கு சித்தர்கள் குரல் அன்பர்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் சென்று பூஜை செய்து முறையாக விபூதி எடுத்த அற்புதமான நிகழ்வு அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.



இது தொடர்பாக காலாகாலமாக விபூதி எடுத்து விநியோகம் செய்து வரும் அங்குள்ள ரவீந்திரன் என்ற இளைஞரை பேட்டி கண்ட போது, அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

"நாங்கள் பிறந்த நாளிலிருந்து இந்தத் தொழிலைத் தான் செய்து வருகின்றோம். இந்த விபூதிமலையானது கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் திருவிழாக் காலத்தில் அதாவது 15 நாட்களில் மாத்திரம்தான் இப்படியாக மணல் போன்று விபூதியாக வரும். ஏனைய நாட்களில் வெள்ளை நிறப் பாறையாகவே இருக்கும். உடைக்கவும் முடியாது .எடுக்கவும் முடியாது. இது கந்தன் அருளாகத்தான் இருக்கும்". இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# பிரதமர் நரேந்திர மோடியை உடன்பிறந்த சகோதரனாக நேசிக்கும் பாகிஸ்தான் பெண்

ரக்ஷா பந்தனையொட்டி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த 27 ஆண்டுகளாக பாகிஸ்தானை சேர்ந்த கமார் மொசின் ஷேக் எனும் பெண் அவருக்கு ராக்கி கட்டியும், தபால் பொதியில் அனுப்பியும் சகோதரத்துவ பாசத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

இந்தியாவில் நேற்றுமுன்தினம் ரக் ஷா பந்தன் விழா கொண்டாடப்பட்டது. சகோதரிகள் தங்களின் சகோதரர்களுக்கு ராக்கி கட்டி வருகின்றனர். தொலைதூரத்தில் உள்ள சகோதரிகள் தங்களின் சகோதரர்களுக்கு ராக்கி அனுப்பி வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடிக்கு எல்லைகளை கடந்து பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 27 ஆண்டுகளாக ராக்கி அனுப்பி வருகிறார். பாகிஸ்தானை சேர்ந்தவர் கமர் மொசின் ஷேக். இவர் ஆண்டுதோறும் பிரதமர் நரேந்திர மோடிக்கு ராக்கி அனுப்பி ரக்ஷா பந்தன் கொண்டாடி வருகிறார். இந்த ஆண்டும் பிரதமர் நரேந்திர மோடிக்கு ராக்கி அனுப்பி தனது ரக்ஷா பந்தன் வாழ்த்தைத் தெரிவித்துள்ளார். மேலும், பிரதமர் மோடி 2024 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் மோடிக்கான ராக்கியை ரேஷ்மி ரிப்பன் மூலம் எம்ப்ராய்டரி முறையில் நானே தயாரித்து அனுப்பினேன். பிரதமர் மோடி உடல் நலத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி கடிதம் எழுதியுள்ளேன். அடுத்த முறையும் அவர் தான் நாட்டின் பிரதமராக வருவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் அதற்குத் தகுதியானவர். அனைத்து முறையும் அவர் வெற்றி பெற்று நாட்டின் பிரதமராக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். டெல்லி வரும் போது அவரை நேரில் சந்திப்பேன் என நம்புகிறேன்" என்று அப்பெண் கூறியுள்ளார்.

# சிறுபான்மை இனத்துக்கு சர்வதேச பெருமையை ஈட்டிக் கொடுத்தவர் அமரர் லக்ஷ்மன் கதிர்காமர்

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களின் 17 ஆவது நினைவு தினம் நேற்றாகும். யாழ் மானிப்பாயைச் சேர்ந்த லக்ஷ்மன் கதிர்காமர் தகைமை பெற்ற ஒரு கல்விமானும்,சிறந்த சட்டப்புலமை வாய்ந்த சட்டத்தரணியும் பல்மொழியாற்றல் மிக்கவருமாவார்.

இவருடைய ஆற்றல் இலங்கைத் தேசத்துக்காகப் பயன்பட்டது.இலங்கையின் தேசநலனை அடிப்படையாகக் கொண்ட இராஜதந்திர முன்னெடுப்பில் அடையாள ரீதியான வகிபங்கை நிலைப்படுத்திய ஓர் ஆளுமை அவராவார். தேசிய அரசியலில் சிறுபான்மையினத்தவர் ஒருவர் கொள்கை வகுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டவரென்றால் அது அவரையே சாரும்

லக்ஷ்மன் கதிர்காமர் 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி மானிப்பாயில் பிறந்தார். அவர் கண்டியில் கல்வி பயின்றார். 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12 ஆம் திகதி கொழும்பில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். புலிகள் இயக்கத்தினரே அவரைச் சுட்டுக் கொன்றனர்.

கண்டி டிரினிட்டி கல்லூரியின் சிறந்த பன்முக ஆளுமை மிக்க மாணவராக திகழ்ந்த அவர், சிறந்த விளையாட்டுத்துறை ஆர்வலருமாவார்.

## ஒன்றுபட்ட தேசத்துக்காக காத்திரமான பங்களிப்பை வழங்கிய கல்விப்புலமை மிகுந்த ஆளுமை

பேராதனை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அங்கு அவர் 1953 இல் சட்டக்கற்கையில் இளங்கலைப் பட்டம் (விசேட) பெற்று பின்னர் 1955 இல் சட்டக் கல்லூரியில் நுழைந்தார். தொடர்ந்து 1958 இல் இங்கிலாந்திற்குச் சென்ற அவர், ஒரு பாரிஸ்டராக தகமை பெற்றார்.

1960 இல் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றார். 1959 இல் ஒக்ஸ்போட் யூனியனின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புலமைச் சொத்துச் சட்டம் மற்றும் சர்வதேச தொழிலாளர் சட்டம் ஆகியவற்றில் நிபுணராக இருந்த அவர், இலங்கை திரும்பும் முன்னர் சட்டப்பயிற்சிக்காக பிரைவி கவுன்சிலில் இணைந்தார்.

1974 இல் ஜெனீவாவில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஆலோசகராக செயல்பட்டார். சர்வதேச புலமைச் சொத்து அமைப்பின் (WIPO) ஆசிய பிராந்திய பணிப்பாளராக 1983 முதல் 1988 வரை அங்கு அவர் பணியாற்றினார். 1998 இல் சார்க் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2003 இல் கதிர்காமர் பொதுநலவாய பொதுச் செயலாளர் பதவிக்கு வேட்பாளராக போட்டியிட்டாலும் நியூசிலாந்தின் டான் மெக்கின்னனால் தோற்கடிக்கப்பட்டார். பொதுநலவாய பொதுச் செயலாளர் பதவிக்கு இலங்கையில் போட்டியிட தகைமை பெற்றது ஜனநாயக ரீதியிலாகும். அவரின் ஆற்றலே அதற்குக் காரணமாக அமைந்தது.



1991 இல் அவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். பின்னரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தீவிர செயற்பாட்டு அரசியலில் நுழைந்தார். 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதோடு, பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கம் மற்றும் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ் 1994 முதல் 2005 வரை வெளியுறவு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 2004 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறுகிய காலத்திற்கு ஊடகத்தைறை அமைச்சராகவும் பதவி வகித்தார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினையில் அரசாங்கத்திற்கு ஆதரவான போக்கிலான நிலைப்பாட்டிலேயே அவர் இருந்தார். குறுகிய சிந்தனைப் போக்கில் சிக்கிக் கொள்ளாமல் தேசிய நீரோட்டத்தில் இணைந்திருந்தார்.

கதிர்காமர் பிந்திய காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமராக கதிர்காமரை நியமிக்காததற்காக சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கையை ஜே.வி.பி எதிர்த்தது. பிற்பட்ட காலத்தில் மறைந்த அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்ட விடயம் இதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## 17 ஆவது நினைவு தினம் நேற்று

அன்று சந்திரிக்கா அம்மையார் தனது பதவிக் காலத்திற்குப் பின்னர் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக இறுதி வரை கதிர்காமரின் பெயரே இருந்ததாகவும், இறுதி நேரத்திலைலேயே அந்த முடிவில் மாற்றம் ஏற்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இலங்கை மூலோபாய கற்கைகள் நிறுவகம் (SLISS) எனும் சட்டத்திற்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2006 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சின் கீழ் நேரடியாக இணைந்த பட்சத்தில் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் என அவருடைய பெயரை சூட்டி ஆய்வு நிறுவகத்தை அரசாங்கம் நிறுவி கௌரவப்படுத்தியது.

வெசாக் தினத்தை சர்வதேச விடுமுறை தினமாக ஆக்கியதன் காரணமாக இந்நாட்டின் பெருன்பான்மை சமூகத்தின் நன்மதிப்பை என்றும் அவர் பெற்றிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. காலத்திற்கேற்ற இராஜதந்திரத்தை மேற்கொண்டு நாட்டின் தேசிய நலனுக்கு பயனுறுதி வாய்ந்த பங்களிப்பை வழங்கிய சிறுபான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னோடி அரசியல்வாதியாவார்.

கதிர்காமரின் நெருங்கிய அரசியல் நண்பரான மறைந்த மங்கள சமரவீர கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்ப காலப்பிரிவில் வெளிவிவகார அமைச்சராக கடமையாற்றும் போது வருடாந்தம் நினைவுப் பேருரைகளை நடத்தினார். 2015 ஆம் ஆண்டு முன்னாள் பிரித்தானிய மற்றும் வட அயர்லாந்து நாடுகளுக்கான பிரதமர் டோனி பிளயரும், 2016 ஆம் ஆண்டு நோர்வே நாட்டுப் பிரதமர் எர்னா சோல்பர்க்கும், 2017 ஆம் ஆண்டு இந்திய அமைச்சரான ரவிசங்கர் பிரசாத்தும், 2018 இல் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபும் வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பிரகாரம் நினைவுப் பேருரைகளை நிகழ்த்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# தாய்வான் விவகாரத்தில் அமெரிக்க–சீன போர் மூளுமானால் ஒட்டுமொத்த உலகுக்கும் ஆபத்து!

சீனாவின் பலத்த எதிர்ப்பையும் மீறிய, அதன் கோபத்தை அதிகரித்த வைத்த தாய்வானுக்கான இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்ட நான்சி பெலோசி அம்மையார் 'ஜனநாயகத்திற்கான அமெரிக்க அர்ப்பணிப்பு மிகக் கடுமையாக உள்ளது' என்கிற கருத்து வெளிப்படுத்தலுடன் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

ஜனநாயக காவலாளி என அமெரிக்க ஊடகங்களாலும் அரசியல்வாதிகளாலும் விழிக்கப்படும் அமெரிக்க நாடாளமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி அம்மையாரின் தாய்வான் விஜயத்தை ஏற்கனவே பகிரங்கமாக கண்டித்த சீனா, தைப்பேயில் அவர் நடந்துகொண்ட விதம், சந்தித்த பிரமுகர்கள், அவர்களுடன் நடத்திய உரையாடல்கள் என்பவற்றால் மேலும் சீற்றமடைந்து தாய்வானை கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் நேரடியாக இறங்கியது.

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக தாய்வானை இலக்காகக் கொண்டு, அதனை மீண்டும் தனது ஆளுமையின் கீழ் கொண்டுவந்து விடவேண்டும் என்கிற நோக்கில் சீனா பாரிய காய் நகர்த்தல்களை மேற்கொள்வதும்,அதனை அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் எதிர்த்து வருவதும் கண்கூடு. தாய்வானை தனது பிரதேசமாக உரிமை கோரும் சீனா, தாய்வான் அரச அதிகாரிகளின் வெளிநாட்டு அரசாங்கங்களுடனான தொடர்பையும் ஈடுபாட்டையும் வெளிப்படையாகவே எதிர்க்கிறது.

ஆனால் தாய்வான் மீதான சீனாவின் 'ஒரே சீனா' கொள்கையை எதிர்க்கும் அமெரிக்க நிர்வாகம், தாய்வான் தலைநகர் தைபேயில் உள்ள அரச அதிகாரரிகளுடன் நெருங்கிய உறவை பேணி வருகிறது.

அந்தப் பிராந்தியத்தில் ஓர் போர் மூளுமானால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம் என எச்சரிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.



இன்று கூடுதலான மக்களின் கைகளில் உலாவரும் கைத் தொலைபேசிகள், குறிபாக ஸ்மார்ட் போன்களை(smartphone)இயங்கவைக்கும்சிப்கள் (chip), உலகில் உள்ள அனைத்து கணினிகளையும் (computers) இயங்க வைக்கும் செமிகொண்டக்டர் சிப் (semiconductor chip) என்பனவற்றின் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளராக திகழ்வது தாய்வான் ஆகும்.

இன்றைய நவீன வாகனங்கள் குறிப்பாக கார்கள் அனைத்தும் இயங்குவதற்கு இந்த செமிகொண்டக்டர் சிப்பின் தொழில்நுட்பம் அவசியமாகிறது. இது தவிர, சிறுவர்கள் உலகிற்கு அத்தியாவசியமாகி வரும் வீடியோ கேம்கள் உட்பட பல மின்னணு சாதனங்கள் செயல்படுவதற்கும் இந்த சிப்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் உலகளவில் உற்பத்தி செய்யப்படும் இன்றைய அனைத்து வாகனங்களிலும் power steering, brake sensor, air bags மற்றும் parking camera போன்ற நவீனங்களான இன்றைய அத்தியாவசியங்கள் இயங்குவதற்கும் இந்த செமிகொண்டக்டர் சிப்கள் அவசியமாகின்றன. இந்த சாதனங்கள் இல்லாமல் இன்றைய வாகனங்களை தயாரிப்பது சாத்தியமற்றது.

வாகனங்கள் மட்டுமின்றி, நவீனங்கள் அனைத்துடனும் இணைக்கப்பட்ட, சிறப்பு அம்சங்கள் அனைத்திற்கும் இந்த சிப்களே பயன்படுத்தப்படுகின்றன. தாய்வானில் தயாரிக்கப்படும் இந்த செமிகண்டக்டர் சிப்கள் அமெரிக்கா உட்பட உலகின் ஒவ்வொரு மூலையிலும் பயன்படுத்தப்படுகின்றன.




இந்த செமிகண்டக்டர் சிப்கள் இல்லாததால் சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் கார்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது,

தற்போதைய நிலைமையில் தாய்வான் விவகாரத்தை மையப்படுத்தி அமெரிக்க சீன போர் முண்டால் கணினிகள், வாகனங்கள், மொபைல் போன்கள் என்பவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டு , இறுதியில் அவை விலை அதி உச்சத்தைத் தொடலாம்.

2020ம் ஆண்டு தரவுகளின்படி, உலகின் மொத்த செமிகண்டக்டர் சிப் உற்பத்தியில் தாய்வான் 63 சதவீதத்தைக் கொண்டுள்ளது எனவும் தாய்வானின் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனமான Taiwan Semiconductor Manufacturing Company, (TSMS) மட்டும் உலகின் 54 சதவீத குறைகடத்தி சிப்க்களை உற்பத்தி செய்கிறது எனவும் தெரியவந்துள்ளது..

அமெரிக்க விமானப்படை அதன் கொடிய F35 போர் விமானத்தில் பயன்படுத்தும் கணினி சிப்கள் (computer chips), தாய்வான் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனத்திலேயே தயாரிக்கப்பட்டன என்பதும், தாய்வான் தயாரிக்கும் உயர் தொழில்நுட்ப இராணுவ தர சிப்க்கள் (Hitech Military Grade Chips) அமெரிக்க இராணுவ உபகரணங்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாய்வான் விவகாரத்தை முன்னிறுத்தி போர் ஒன்று ஏற்படுமானால் அமெரிக்க படை நடவடிக்கைகளுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அமெரிக்கா இவற்றுக்கான மாற்று ஏற்பாடுகளை செய்யும் வரை போரை விரும்பாது எனவே எதிர்பார்க்கப்படுகிறது.

**கோவை நந்தன்...**

---

# பாரம்பரிய விவசாயத்துடன் தொழில்நுட்பத்தை இணைக்கும் 'உழவர் தோழன்' சேவை அறிமுகம்

உள்ளூர் தகவல் தொடர்பாடல் துறையில் முன்னணியில் இருக்கும் டயலொக் ஆசிஆட்டா, உள்ளூர் விவசாயத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், நவீன தகவல் தொழில்நுட்பத்தை உள்ளிணைத்து விவசாயிகளின் வாழ்க்கையை வளமாக்கும் நோக்கத்துடனும் 'உழவர் தோழன்' என்ற கையடக்கத் தொலைபேசி App ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது பாரம்பரிய பொருளாதார பயிர்களுடன் தொடர்புபட்டது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் வடிவமைக்கப்பட்ட இந்த App ஐ விவசாயத்தில் ஈடுபடும் அனைவரும் எளிதாக உள்ளிணைக்க முடியும். இந்த App இன் மூலம் விவசாயிகளின் தேவைக்கேற்ப, செய்கை நிலத்தின் அமைப்பிற்கு ஏற்ப, செய்கை பண்ணப்படுகின்ற பயிர் மற்றும் பயிரின் வளர்ச்சி நிலை ஆகியவற்றுக்கு அமைவாக துல்லியமான மற்றும் விரிவான தகவல் விபரங்கள் வழங்கப்படுகின்றன.

மிகவும் பரந்த அளவிலான சேவைகளுடன் இயங்கும் இந்த தனித்துவமான உழவர் தோழன் App ஐ Google Play Store மூலம் மொபைல் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து இந்த சேவையுடன் இணைந்து கொள்ள முடியும். மேலும் 616 என்ற துரித சேவை அழைப்பு இலக்கத்தினை அழைப்பதன் மூலமும் இச்சேவையுடன் இணைந்து கொள்ள முடியும்.

டயலொக் இணைப்பு மூலம் இந்த மொபைல் App சேவையுடன் இணைபவர்களுக்கு டேட்டா கட்டணம் ஏதும் கிடையாது, மேலும் தினசரி கட்டணமாக ரூபா. 2 மற்றும் உரிய வரிகள் மாத்திரமே அறவிடப்படும். எந்த ஒரு தகவல் விபரத்தையும் பெற்றுக் கொள்ள 616 இற்கு அழைப்பினை ஏற்படுத்துவதற்கு அழைப்பொன்றுக்கு ரூபா ஒன்று மற்றும் உரிய வரி என்ற வீதத்திலும் கட்டணம் அறவிடப்படும்.

இச்சேவையை உள்ளூர் விவசாயிகளுக்கு மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், தற்போது தேயிலைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக இந்த உழவர் தோழன் சேவையில் அதுவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், தேயிலைத் தொழில் தொடர்பான சிறப்புத் தகவல்கள் மற்றும் தேயிலைச் செய்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் குறுஞ்செய்திகள் மற்றும் அழைப்புகள் மூலம் விவசாயிகளின் கைத்தொலைபேசிகளுக்கு உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

புகழ்பெற்ற சர்வதேச தேயிலை உற்பத்தியாளரான அக்குரஸ்ஸ நந்தன தேயிலைத் தொழிற்சாலையானது, இந்த தனித்துவமான தொழில்நுட்பத்தை டயலொக் உழவர் தோழன் சேவையுடன் இணைந்து விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு அவர்களின் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதன் மூலம் உயர் நன்மைகளை அடையப்பெற்றுள்ள நிறுவனத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து விவசாய ஆலோசனைச் சேவையாக 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உழவர் தோழன் அழைப்புச் சேவையானது, டயலொக் ஆசி ஆட்டாவின் மத்தியஸ்தப் பணிகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான மற்றும் நிலைபேற்றுடனான அங்குரார்ப்பண செயற்திட்டங்களில் ஒன்றாகும். தற்போது, தேயிலை உட்பட 32 இற்கும் மேற்பட்ட பயிர்களை உள்ளடக்கிய, 10,000,000 விவசாயிகள் தங்கள் பயிர்களை வெற்றிகரமாக செய்கை பண்ண தேவையான ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன.





---

# பேரளிவாளனைப் போன்று தன்னையும் விடுதலை செய்யக் கோருகிறார் நளினி!

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தம்மை விடுதலை செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் நளினி மனுத் தாக்கல் செய்துள்ளார். மேலும் தம்மை இடைக்கால பிணையில் விடுதலை செய்யவும் நளினி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 26 பேருக்கு 1998 ஆம் ஆண்டு சென்னை பூவிருந்தவல்லி தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இத்தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதில் சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளனுக்கு மட்டும் தூக்குத் தண்டனை உறுதியானது. பின்னர் 2000 ஆம் ஆண்டு நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.



## உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை மனு

இதனைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தால் 2014 ஆம் ஆண்டு பேரறிவாளன், சாந்தன், முருகனின் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இதனையடுத்து ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் மொத்தம் 7 பேர் ஆயுள் தண்டனை அனுபவித்தனர். இந்த 7 தமிழரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழகத்தின் நீண்டகால கோரிக்கை. இது தொடர்பாக சட்டசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று 2016 இல் பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த மார்ச் மாதம் பேரறிவாளனுக்கு இடைக்கால பிணை வழங்கியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் முடிவில் உச்சநீதிமன்றம் மே 18 ஆம் திகதி மிக முக்கியமான தீர்ப்பை வழங்கியது. அரசியல் சாசனத்தின் 142 ஆவது பிரிவின் கீழ் உச்சநீதிமன்றம் தமக்கான சிறப்பு அதிகாரத்தின் கீழ் இத்தீர்ப்பை வழங்கியது.

அத்தீர்ப்பில், ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன் 31 ஆண்டுகாலம் சிறை தண்டனை அனுபவித்து விட்டார். அவரது சிறைத் தண்டனை, நன்னடத்தை, பிணைக் காலம் உள்ளிட்டவைகளை ஆராய்ந்து ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் சிறையில் இருந்து பேரறிவாளனை விடுதலை செய்வதாக தெரிவிக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் அரிதிலும் அரிதாக 142 ஆவது பிரிவை பயன்படுத்தி இத்தீர்ப்பை வழங்கியது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில், ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினியும் உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். பேரறிவாளனை விடுதலை செய்த தீர்ப்பின் அம்சங்களை அம்மனுவில் சுட்டிக் காட்டியிருக்கிறார் நளினி. மேலும் இடைக்காலமாக பேரறிவாளனுக்கு வழங்கியதைப் போல தம்மை பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரியிருக்கிறார் நளினி.

# குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு தாலாட்டும் வாய்ப்பு

ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலய ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழாவில் பக்தர்களுக்குக் கிடைக்கவிருக்கிறது. சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தினரின் இலங்கைக் கிளையினரால் கொழும்பு கொட்டாஞ்சேனையில் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலயத்தில் இம்மாதம் ஆகஸ்ட் 19 வெள்ளிக்கிழமையன்று பகவான் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அவதரித்த நன்னாள் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும்.



அன்றைய தினம் அதிகாலை 6:00 மணி முதல் இரவு 8 மணி வரை விஷேட ஆராதனைகள் நடைபெறும். காலை 6 மணிக்கு மங்கள ஆரத்தியைத் தொடர்ந்து துளசி ஆரத்தி மற்றும் தர்சன ஆரத்தி, குரு பூஜை நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரி சங்கினால் பால் அபிஷேகமும் ஆராதனையும் செய்யப்படும்.

அதனைத்தொடர்ந்து குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

பிற்பகல் 12:30 மணிக்கு ராஜபோக ஆரத்தியும் மாலை தூப ஆரத்தி, துளசி ஆரத்தி, சந்திய ஆரத்தி நடைபெற்று குழந்தைகிருஷ்ணரை தொட்டிலிலிட்டு பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

இரவு 8 மணிக்கு ஸ்ரீஸ்ரீ ராதா ராதாகிருஷ்ணருக்கு மகா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட ஆராதனை நடைபெற்றபின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும். பக்தர்கள் அபிஷேகத்திற்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள் மற்றும் தேவையான பொருட்களையும் கொண்டு வந்து கொடுக்கலாம்.

**சனிக்கிழமை வியாச பூஜை**

மறுநாள் 20ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிருஷ்ண பக்திக் கழக ஸ்தாபகரும், ஆன்மீகக் குருவுமான அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை நடைபெறும்.

## கோட்டை நீதவான் நீதிமன்றில்...

எவ்வாறாயினும், அருட்தந்தை ஜீவந்த பீரிஸுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிப்பதாகவும், நாளைய தினம் (இன்று) பொலிஸ் நிலையத்திற்கு வருகைத் தந்து வாக்குமூலமொன்றை வழங்குமாறும் நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார். அதன்படி, எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## காலிமுகத்திடல் முழுமையாக...

வெளியேறுவதற்கு தாம் முடிவெடுத்துள்ளதாக காலிமுகத்திடல் கோட்டாகோகம போராட்டக்காரர்கள் கடந்த 10ஆம் திகதி அறிவித்திருந்தனர்.

அத்துடன், போராட்டக்களத்திலிருந்து வெளியேறினாலும் கூட எமது போராட்டம் நீடிக்கும். நாங்கள் அரைவாசி வெற்றியை அடைந்தாலும் கூட இன்னும் வெற்றிகளை காண வேண்டியுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். எனினும் அப்பகுதியிலிருந்து செல்லப் போவதில்லை என தெரிவித்து சில ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்பகுதியிலேயே தற்காலிக கூடாரங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தரம் 05 மாணவன்...

ஆசிரியையொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ. றஹீம் தெரிவித்தார். தாக்குதலுக்கு உள்ளான மாணவன் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

மாணவன் பாடசாலையின் மேல் மாடிக்கு அழைத்துச் வெல்லப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டிருந்ததாகவும் கைது செய்யப்பட்ட ஆசிரியை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் அதிபர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொழும்பை வந்தடைந்தது...

துறைமுகத்தை வந்தடைந்துள்ள இக் கப்பல் இலங்கை கடற்படையுடன் கூட்டு பயிற்சியில் ஈடுபடவுள்ளதாகவும் எரி பொருள் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளவுள்ளதாகவும் கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார். பாகிஸ்தான் கப்பல் நல்லெண்ண விஜயமாகவே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளிக்கிழமை முதல் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள காலப்பகுதியில் இலங்கை கடற்படையுடன் கூட்டு பயிற்சியிலும் ஈடுபடவுள்ளது என அவர் தெரிவித்தார்.

## மின் கட்டணத்தில்...

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் ஒரு நாள் விவாதம் ஒன்றுக்கு நாம் காலம் வழங்கியுள்ளோம்.

அதேபோன்று இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை நாம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இணைத்துக் கொண்டுள்ளோம்.

அதன்படி எதிர்வரும் 30,31ஆம் திகதிகள் மற்றும் செப்டம்பர் 1,2ஆம் திகதிகளில் விவாதம் நடத்தவுள்ளோம்.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் மின்சார கட்டணத்தில் நிவாரணம் வழங்கக் கூடியவர்களுக்கு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பிலான வேலைத் திட்டம் சம்பந்தமாக தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அந்த நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளதையடுத்து எதிர்காலத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பயண செலவுக்கான கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதேவேளை கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மாவட்ட விவசாயி... 03ஆம் பக்கத் தொடர்

விவசாயிகளுக்கான டீசல் இன்று (13) சனிக்கிழமை தொடக்கம் கட்டைவேலி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, சங்கானை, கொடிகாமம், கைதடி மற்றும் வேலணை ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கமநலசேவை நிலையத்தினரின் கண்காணிப்பில் விநியோகிக்கப்படவுள்ளது என அவர் தெரிவித்திருந்தார்.

## மண்ணெண்ணெய், ... 03ஆம் பக்கத் தொடர்

தேவைப்படுகின்றது. கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 1,200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் முஸ்லிம் சமூகம் பல்வேறு இன ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டதென தெரிவித்த அவர்,தற்போதைய ஜனாதிபதி ஒரு இனவாதியல்ல அவரோடு இருப்பவர்களே அவரை வித்தியாசமாக பார்க்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

## தமிழ்தேசிய கூட்டமைப்பு... 03ஆம் பக்கத் தொடர்

கருணாகரம் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு சபையில் எழுந்து நின்று அமைதியான ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

சபையில் வினோ நோகராதலிங்கம் எம்.பி.யின் உரை முடிவடையும் வரை பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் எழுந்து நின்ற போதும் சபையில் எவரும் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி எம்.பி.க்கள் எவரும் சபையில் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு சாத்தியமான... 03ஆம் பக்கத் தொடர்

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டமைக்காக அமைச்சர் அலி சப்ரிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர், இலங்கை ஐக்கிய அரபு இராச்சிய இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், இந்த நேரத்தில் இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

## பாப்பரசரிடமிருந்து...

இது இலங்கை பெறுமதியில் சுமார் 400 இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகையை 3 பகுதிகளாகப் பிரித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்க கொழும்பு பேராயர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

## காணாமல் ஆக்கப்பட்டோரது...

வடக்கு மாகாணம் தழுவி கிளிநொச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதுடன் அவர்களுக்குரிய நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தியும், இனப் படுகொலையை மேற்கொண்டவர்களை கைது செய்ய கோரியும், இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

ளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இக் கவனயீர்ப்பு போராட்டம் ஏ9 வீதி ஊடாக இப் பேரணியாக கிளிநொச்சி டிப்போ சந்திவரை சென்றது.

## சர்வகட்சி அரசாங்கத்தில்...

தெரிவிக்கையில்,“சர்வகட்சி அரசாங்கம் உருவாகும் எனில் நாங்கள் நாட்டு மக்களின் நன்மை கருதியும் நாட்டின் சூழ்நிலை கருதியும் சில நிபந்தனைகளுடன் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய தயாராக உள்ளோம்.

ஆனால் கடந்த காலங்களில் ஆளுங்கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகளில் அவர்களை ஏமாற்றியுள்ளனர்.இதனை நல்ல அனுபவமாக கொண்டு,யாருக்கும் நாங்கள் எழுந்தமானமாக ஏமாற்றுத்தனமாக ஆதரவு தருவதற்கு தயாராக இல்லை” என கூறியுள்ளார்.

## தனிஷ் அலியுடன் நால்வருக்கு...

கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், தனிஷ் அலி உள்ளிட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## முச்சக்கர வண்டிகளுக்கு...

விடுத்துள்ளது.

இந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்காக வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

## ஆயிரம் ரூபா சம்பளமே...

தினசரி வேதனமாக தொழிலாளர்களுக்கு வழங்க கம்பனி தரப்பு கடமைப்பட்டுள்ளதாக இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இ. தம்பையா தெரிவித்தார்.

அத்துடன் இத்தீர்ப்புக்கு எதிராக கம்பனிகள் மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறினார்.

கூட்டு ஒப்பந்தத்துக்கு உட்பட்ட சம்பள நிர்ணயத்தில் சம்பள நிர்ணய சபை தலையீடு செய்ய முடியாதென்றும் தேயிலை விலை நிரந்தரமற்றது என்பதால் 1,000 ரூபா சம்பளம் என்பது பொருத்தமற்றது என்றும் கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து கம்பனி தரப்பு வெளியேறி இருப்பதாலும் 1,000 ரூபா என்ற சம்பள நிர்ணயம் சாத்தியமானதல்ல என்ற வாதத்தை கம்பனி தரப்பு முன்வைத்திருந்தது.

இவ்வாதங்களை நீதிமன்றம் நிராகரித்து சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாதென்று தீர்ப்பளித்திருந்தது.

மேன்முறையீடு செய்யப்படுமானால் அங்கு வரக்கூடிய தீர்ப்பு தொழிலாளர் தரப்புக்கு பாதகமாக அமையலாமா? என சட்டத்தரணி தம்பையாவிடம் கேட்டபோது, தீர்ப்பு எப்படி அமையும் என்பதை அனுமானிப்பது சரியல்ல என்றும் ஆனால் பாதகமாக வரக்கூடியதற்கான வாய்ப்புகள் குறைவு எனத் தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

## TNAஐ விரும்பாதவர்கள்...

அழைப்பு விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு தமிழ் மக்களிடம் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனை நான் கூறவில்லை, அண்மை காலங்களில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

தமிழ் மக்களுக்காக உண்மையை உரத்து கூறி பண பெட்டிகளுக்கு விலை போகாத தந்தை செல்வாவினால் வழி நடத்தப்பட்ட பழம் பெரும் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தாமே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு விடயங்களை நிறைவேற்றப்போகிறோம் எனக் கூறிவரும் தலைவர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் இதுவரை தமிழ் மக்களுக்காக எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது மூன்று இலட்சம் பேர் வன்னி யுத்த பூமியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறியவன் நானே.

இறுதி யுத்தத்தில் உயிர் சேதங்கள் ஏற்படப்போகின்றது என தெரிந்தும் மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சு வார்த்தைக்கு வருமாறு சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழைத்தபோது எவரும் முன்வரவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பசில் ராஜபக்சவை சந்திக்க சென்ற போது, ஆனந்த சங்கரி சொல்லித்தான் எமக்கு மூன்று இலட்சம் பேர் அங்கு அகப்பட்டிருக்கிறார்கள் என தெரியவந்ததாக கூறினார்.

நான் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரைப் போன்று பணப்பெட்டி வாங்கவில்லை, கொலை செய்யவில்லை. எனக்கு ஒரு பணப்பெட்டி கிடைத்தது. அதுவும் நான் செய்த பணிக்காக வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அதனை வழங்கியது. அதுவே எனக்கு கிடைத்த பணப்பெட்டியாகும்.

ஆகவே பணத்துக்காக பதவிக்காக தமிழ் மக்களை என்றும் நான் விற்றதில்லை. அவ்வாறு ஆசை இருந்தவனாக இருந்திருந்தால் இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் மூலம் மாவை சேனாதிராஜாவை பாராளுமன்றத்திற்கு அனுப்பி இருக்கமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் பதவிக்கு தமிழ்...

இனவாதமற்ற சமூகம் தோற்றம் பெற்றால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் நாம் முன்னேற்றமடைய முடியும் என தெரிவித்த அமைச்சர் நாட்டின் முன்னேற்றத்திற்கு நாட்டு மக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். கடந்த இரண்டரை வருட காலப்பகுதியில் அவர் நாட்டுக்காக சிறந்த பல வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தாலும் கொரோனா பெருந்தொற்று பாதிப்புகள் மற்றும் தூரநோக்கற்ற பொருளாதார கொள்கை ஆகிய விடயங்களே பாதகமாக அமைந்து அவர்

பதவி விலக நேரிட்டது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தினால் செயற்படுத்த முடியாத செயற்பாடுகளை மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய செயற்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு உள்ளது.

பாராளுமன்றத்தினதும் மக்களினதும் நம்பிக்கையினை வென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னோக்கி செல்வார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கிணங்க அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படவுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் எதிர்பார்த்த வகையில் அமையாவிடினும் அதனை செயல்படுத்துவதன் மூலம் சவால்களை வெற்றிக்கொள்ள வேண்டியுள்ளது.

1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல், சமூக கட்டமைப்பு காலத்திற்கு காலம் மாற்றமடைந்துள்ளது. ஆட்சியிலிருந்த அரச தலைவர்கள் அனைவருமே நாட்டுக்கு நன்மை பயக்கும் சிறந்த திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளனர். அனைத்து தலைவர்களும் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பல்லின சமூகம் வாழும் நாடு என்ற ரீதியில் இனவாத முரண்பாடுகளுக்கு மத்தியில் பல சிறந்த திட்டங்கள் காலத்துக்கு காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடியினை தீவிரப்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார மீட்சிக்காக அரச சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் பிரபலமற்றதாக அமைந்தாலும்,பொருளாதார மீட்சிக்கு ஏற்புடையதாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

இனவாதமற்ற சமூகத்தை தோற்றுவிக்க வேண்டுமாயின் குறைந்தபட்சம் பிரதமர் பதவிக்கு தமிழ்,முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும். அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலை அவசியம்.

சமூக கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே நாடு முன்னேற்றமடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சவால்களுக்கு மத்தியில்...

பொறுப்பேற்றுள்ளாரென தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, சவால்களை வெற்றி கொள்வதற்கு ஜனாதிபதிக்கு கால அவகாசம் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை 03 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு முறையான செயன்முறை மற்றும் திட்டமிடல் அவசியம்.

19ஆவது அரசியல் திருத்தத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைத்த போதும் அது இரு பக்கமும் வெட்டக் கூடிய வாள் என்பதால் அதன் மூலம் ஆட்சியைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாத நிலையே காணப்பட்டது.

இலகுவாக தேர்தல்களை வெல்ல முடியுமெனினும் நாடு தொடர்பில் முறையாக செயல்படுவதற்கு திட்டமிடலுடனான வேலைத்திட்டங்கள் அவசியம்.

எதிர்வரும் இரண்டரை வருடங்கள் புதிய ஜனாதிபதிக்கு அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

06 இலட்சமாக காணப்பட்ட அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை 15 இலட்சமாக அதிகரித்துள்ளது. 199 அரச நிறுவனங்கள் பெரும் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளன.

அந்த வகையில் டெலிகொம் நிறுவனம் மற்றும் எயார் லங்கா நிறுவனம் போன்றவை தொடர்பில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்த நிறுவனங்கள் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கக் கூடிய இலாபம் எவ்வளவென பார்க்க வேண்டும்.

அனைவரும் இணைந்த முறையான வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக நெருக்கடியான காலகட்டத்தில் பாரிய சவாலை பொறுப்பேற்றுள்ளார். அதற்கு கால அவகாசம் வழங்குவது அவசியம். புரட்சிகள்,போராட்டங்கள் இடம்பெறுகின்ற போதும் ஜனநாயகம், அரசியலமைப்புக்கு இணங்கவே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். எந்த நடவடிக்கைகளையும் அரசியலமைப்பை மீறி மேற்கொள்ள முடியாது.

நாட்டில் 90 வீத மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதையடுத்தே அவர்கள் வீதிகளில் இறங்கினர்.

இது இயல்பாக நடக்கக்கூடிய விடயமே. எனினும் அதனை வாய்ப்பாகிக் கொண்டு ஜனநாயகத்தை மதிக்காத சில தரப்பினர் மிக மோசமாக செயல்பட்டனர். மக்களின் உணர்வுகளை வைத்து அவர்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செய்யப்பட்டனர். 70 வருட காலமாக நாட்டில் புரட்சி செய்தவர்கள், பல்வேறு மோசமான செயல்களில் ஈடுபட்டவர்கள் சிலர் மட்டுமே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமென கூறுவது விந்தையானது. அவ்வாறு கூறுவதை ஏற்க முடியாதென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சுயலாபத்தை கைவிட்டு...

கால கட்டத்தில், இன்னும் சில தினங்களில் இவ் விவகாரத்துக்கு தீர்வை வழங்க முடியுமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இருண்டிருந்த ஒரு யுகத்தில், அதை சபித்துக் கொண்டிராமல், ஒரேயொரு விளக்காக இருந்து, இந்த நாட்டுக்கே ஒளி தருவதற்கு முன்வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை யாவரும் அறிவோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நாடு முகம் கொடுத்திருந்த நெருக்கடி நிலைமையில், இந்த அரசுக்கெதிராக எழுந்திருந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில், இந்த நாட்டின் பிரதமர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்வருமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தார். ஆசையிருந்தும், அச்சம் காரணமாக பலரும் பின்வாங்கியும், நிபந்தனைகளை விடுத்தும், தப்பித்தும் கொண்டும் இருந்தபோது, இந்த சவாலை தைரியமாக ஏற்று முன்வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

எந்தவொரு விடயம் குறித்தும் நடைமுறைச் சாத்தியமாக சிந்தித்து, முடிவெடுக்கும் நாம், இந்த நாட்டின் சவால்கள் மிகுந்த இக்காலகட்டத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆற்றல் குறித்து திடமான நம்பிக்கைக் கொண்டிருந்தோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் சதி காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ய விருந்த நிலையில், பதில் ஜனாதிபதியாகவும் இடைக்கால ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்று எமது நாடு முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடித் தரக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற உறுதியான நம்பிக்கை எம்மிடம் இருந்ததால், எமது ஆதரவை பகிரங்கமாகவே அவருக்கு வழங்க முன்வந்திருந்தோம்.

‘சுயலாபம் கருதி பொது நோக்கை வெறுத்து அலையும் கூட்டம் அல்ல நாம். பொது நோக்கு கருதி சுயலாபங்களை வெறுக்கும் நாட்டம் கொண்டவர்கள் நாம்.'நாம் வெல்லும் பக்கம் நிற்பவர்கள் அல்ல' நிற்கும் பக்கத்தின் வெற்றிக்காக நாம் உழைப்பவர்கள் . அவரை இவரை நம்புவது என்பதற்கு அப்பால் கனிந்து வந்திருக்கும் சூழலை சரிவர பயன்படுத்தி எமது இலக்கை நாமே எட்டிவிட எம்மை நாமே முழுமையாக நம்புகிறோம்.

பாராளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்வாரா? இல்லையா? என்பதற்கு அப்பால் எமது தேசத்தின் இன்றைய பொருளாதார சவால்களை அவரே வெல்வார் என்றே அவரை நாம் அரசியல் துணிச்சலோடு ஆதரித்தோம். நாம் விரும்பியது போல் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறியிருக்கின்றார்.

தனது சிம்மாசன உரையில் அவர் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண சர்வகட்சி அரசுக்கான அழைப்பை விடுத்துள்ளார். இது ஒரு அரிய வாய்ப்பு. சகல தரப்புடனும் இணைந்து சக தமிழ் தரப்பும் இதை சரிவரப்பயன்படுத்த முன்வரவேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் தொடக்கம், அதை ஏற்றவர்கள், ஏற்காதவர்கள் உட்பட வரலாறெங்கும் இதுவரை காலம் எமக்கு கிடைத்த அறிய வாய்ப்புகள் யாவும் பன்றிகளுக்கு முன்னாள் போடப்பட்ட முத்தாகவே கடந்து போய் விட்டன . இன்று கனிந்துள்ள அரிய வாய்ப்பை யாவது சுயலாபம் அற்று அறிவார்ந்து சிந்தித்து சரிவர பயன்படுத்த முன் வருமாறு சக தமிழ் தரப்பினருக்கு மீண்டும் நான் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.




# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா





**யாழ். விசேட நிருபர்**

நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வழங்கி கௌரவிக்கின்ற "யாழ் விருது" இந்த ஆண்டு திருக்கேத்தீச்சர ஆலய திருப்பணிச் சபையினருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் சைவத்திற்கும் , தமிழுக்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து ' யாழ்.விருது' வருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இவ்வாண்டு ஈழத்தின் வரலாற்று சிறப்பு மிக்க, சமய குரவர்களின் பாடல் பெற்ற, சிவத்தலமான, திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகப் பணிகளை ஆற்றி ஈழத்தில் சைவ சமயம் மறுமலர்சியுற துணை செய்து இறைபணி புரிந்த திருக்கேத்தீச்சர ஆலய திருப்பணிச் சபையினருக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு ஆலய திருப்பணிக்கு நிதியுதவியினை ஆற்றிய இந்திய அரசை கௌரவிக்கும் முகமாக யாழ். இந்திய துணை தூதுவருக்கு கௌரவிப்பு விருதும் வழங்கிவைக்கப்பட்டது.

விருது வழங்கலை அடுத்து நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

# கட்டப்பட்டிருந்த பசு மாடு மீது விஷமிகள் தாக்குதல்

**யாழ்.விசேட நிருபர்**

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த பசு மாட்டின் காலை துண்டாடி மற்றொரு காலிலும் காயத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மூளாய், முன்கோடை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

அப்பகுதியை சேர்ந்த ஒருவர் தனது வாழ்வாதாரத்திற்காக பசு மாடுகளை வளர்த்து வருகின்றார். அந்நிலையில் வழமை போன்று தனது பிரதேசத்திலுள்ள காணி ஒன்றில் பசுவை மேய்ச்சலுக்காக கட்டியுள்ளார்.

மாடுகளை அவிழ்க்கச் சென்ற போது பசுவின் கால் ஒன்று துண்டாடப்பட்ட நிலையில் மற்றுமொரு காலில் காயம் ஏற்படும் வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரத்த வெள்ளத்தில் மாடு கிடந்துள்ளது.

அதனை அங்கிருந்து மீட்ட போதிலும் மாடு வலியினால் உணவு உட்கொள்ளாது இருந்திருக்கின்றது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை கால் நடை வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் மாட்டின் உரிமையாளர் முறைப்பாடு அளித்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 2000 நாட்களை கடந்தது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்




**கிளிநொச்சி குறூப் நிருபர்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்து 2000 நாட்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்றைய தினம் கிளிநொச்சியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டமானது டிப்போ சந்தியை சென்றடைந்து அங்கு கண்டன உரைகளும் இடம்பெற்றன.

வட, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இணைந்து உண்மையையும் நீதியையும் கோரி முன்னெடுத்துவரும் தொடர் போராட்டம் 2000 நாட்களை எட்டியுள்ளமையை நினைவுகூரும் வகையில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் நேற்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றுஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதுடன் அவர்களுக்குரிய நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தியும், இனப்படுகொலையை மேற்கொண்டவர்களை கைது செய்ய கோரியும், இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# மன்னார் மாவட்டத்தில் மீண்டும் தீவிரமடையும் கொரோனா தொற்று

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களில் கொரோனா தொற்று தீவிரமடைந்து வருவதாகவும் மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 103 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை(12) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களாக கொரோனா தொற்று தீவிரமடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 967 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 103 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி இவர்களில் மொத்தம் 6 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். மாவட்டரீதியில் பார்த்தால் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றானது சாதாரண தடிமன், தலைவலி,தலைபாரம் ஆகிய அறிகுறிகளை கொண்டிருக்கின்றது.

இவர்களில் அதிகமானவர்கள் வீடுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கின்றனர். 103 நோயாளர்கள் எம்மால் கண்டறியப்பட்டால் இதை விட 7 அல்லது 8 மடங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு வருகை தராமல் சுய சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடுகளில் தங்கி இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

இந்த தொற்றானது சாதாரண நிலையில் காணப்பட்டாலும் கூட ஒரு சமூகத்தில் மிகவும்,குறுகிய காலத்தில் பரவும் போது திரிவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இவ்வாறு திரிவடைந்தால் வீரியம் கூடிய வைரஸ் ஒன்று இந்த சமூகத்தில் உருவாகி பரவும் போது அதிக உயிரிழப்புகள் ஏற்படும் வாய்ப்புள்ளது. நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக மக்கள் வீட்டில் தங்கி இருக்கவோ அல்லது பிரதேசங்களை முடக்கவோ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் இவ்வாறான சூழ்நிலையில் கட்டாயம் முககவசங்களை அணிந்து கொள்ள வேண்டும்.

கூடிய அளவில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த இடங்களில் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிக்கவேண்டும்.

மாவட்டத்தில் இதுவரை 20 வயதுக்கு மேற்பட்ட 64 சதவீதமானவர்கள் முதலாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசி,அல்லது 3 ஆவது பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே மூன்றாவது அல்லது மேலதிக வலு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக உங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது பொது சுகாதார பரிசோதகர்களை தொடர்பு கொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.



## மடு திருத்தலத் திருவிழாவில் அவதானம் தேவை

# பெண் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் திட்டம் முன்னெடுப்பு

## யாழ்ப்பாணத்தில் 6 இடங்களில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை!

பொருளாதார ரீதியில் பின்தங்கிய பெண்களை சுயதொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதற்கான கருந்தரங்கொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் பெண்களை அதிலிருந்து மீட்டு சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் நோக்குடன் இக்கருந்தரங்கு இடம்பெற்றது. அதற்கமைய யாழ் மாவட்ட சமூக மட்ட அமைப்புகள், சுயதொழில் முயற்சியாளர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களை ஒன்றிணைத்து கருத்திட்டங்களை முன்மொழிவதற்கான ஒரு ஏற்பாடாக இக்கருந்தரங்கு யாழ். ரில்கோ தனியார் விடுதியில் நடைபெற்றது.

ஜெசாக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரதேச மட்ட அமைப்புகளூடாக அவர்களுடைய பகுதிகளில் பெண்களின் ஆளுமைகள் மற்றும் வலுவைகொண்டு மேற்கொள்ளக் கூடிய கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அவற்றை முன்னெடுக்கக் கூடிய ஏதுநிலைகளின் சாதக பாதக நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் நடைமுறைப்படுத்துவதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது.



சுமார் இரண்டு வருடங்களாக பல்வேறு பிரதேசங்களை உள்ளடக்கிய ரீதியில் பெண்களை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்டுவந்த இந்த பயிற்சி பட்டறையினூடாக தற்போது திட்டங்களை பெண்களிடமிருந்தே பெற்று அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக சுமார் 6 பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டமானது மனித வளத்தையும் பிரதேசத்திலுள்ள இயற்கையான வளங்களையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்திற்கு பெண்களிடையே குறிப்பாக சமூகமட்ட பெண்கள் அமைப்புகளுக்கிடையே அதிக ஆர்வம் காணப்படுகின்றது.

# வவுனியாவில் போக்குவரத்து பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கை



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் போக்குவரத்து நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கும் முகமாக நகரின் பல பகுதிகளிலும் போக்குவரத்துபொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.


வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி றொசான் சந்திரசேகர தலைமையில் மூன்று பொலிஸ் குழுக்கள் வைரவப்புளியங்குளம், புகையிரத நிலைய வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, கண்டி வீதி ஆகிய பகுதிகளில் திடீர் சோதனை நடவடிக்கையை நேற்று மாலை (11.08) மேற்கொண்டனர்.

இதன் போது வீதி நடைமுறையினை பின்பற்றாதவர்கள், தலைக்கவசம் சீராக அணியாதவர்கள், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக 3 சாரதிகளுக்கு எதிராக குற்றம் பதிவு செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டது.

# செம்மலைப்பகுதியில் எரிபொருள் பதுக்கல் ஒருவர் கைது

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகளில் எரிபொருள் பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றனர். முல்லைத்தீவு செம்மலை,பகுதியில் வீட்டில் எரிபொருட்களை பதுக்கி வைத்திருந்த நபரொருவரையும் எரிபொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.



வீட்டிலிருந்த 45 லீற்றர் டீசல், 21 லீற்றர் பெற்றோல் என்பன இதன் போது மீட்கப்பட்டுள்ளன. இதன் போது 50 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



யாழ்.சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள கதிரமலை சிவன் ஆலய தேர்த்திருவிழாவின் போது பாதுகாப்பு தரப்பினர் பொங்கல் பொங்கி பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்நிகழ்வினை கருணாகரன் ஒழுங்கமைப்பு செய்ததோடு நிகழ்வில் மேஜர் ஜெனரல் உதயகுமார மற்றும் வடமாகாண விசேட அதிரடிப்படை பணிப்பாளர் ஹொற்றிஆராச்சி மற்றும் 511 பிரிக்கேடியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

படம் கோப்பாய் குறூப் நிருபர்

# கிழக்கின் குரல்



# ஷுஹதாக்களை நினைவு கூருவது சமூக அடையாளத்தை அர்த்தப்படுத்தும்

ஏறாவூரில் நடைபெறும் ஷுஹதாக்கள் தினம், முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சவால்களில் ஒன்றை வெளிப்படுத்துவதாகவும், இத்தினத்தில் ஷஹீதாக்கப்பட்ட முஸ்லிம்கள் சலருக்கும் அல்லாஹுத்தஆலா நல்லருள் பாலிக்க பிரார்த்திப்பதாகவும் சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் எதிர்கொள்ள நேர்ந்த இன ஒழிப்புக்களில் ஒன்றுதான் ஏறாவூர் படுகொலைகள்.1990 ஆகஸ்ட் 11 இல்,தூங்கிக் கொண்டிருந்த முஸ்லிம்கள் நள்ளிரவில் எழுப்பப்பட்டு துப்பாக்கி,கோடரி மற்றும் இன்னோரன்ன ஆயுதங்களால் படுகொலை செய்யப்பட்டனர். முஸ்லிம்கள் என்ற ஒரேயொரு மார்க்க (மதம்) காரணத்துக்காகவே இப்படுகொலை நிகழ்ந்தது. ஒரே வாழிடத்தில்,ஒரே மொழிபேசி, கிட்டத்தட்ட ஒரே கலாசார சாயலுடன் வாழ்ந்த முஸ்லிம்களை கொலை செய்த சக்திகள், முஸ்லிம்களை மாற்று இனமாகவே நோக்கியிருக்கின்றன.

இதனால்தான், இந்த இன அழிப்பை செய்திருக்கின்றன. இன அடையாளத்தில் இந்தச்சக்திகள், முஸ்லிம்களிடம் என்ன வேறுபாட்டைக் கண்டனரோ தெரியாது.

சிறுபான்மை சமூகங்களின் ஒரு மொழித் தாயகத்தை வேறுபடுத்தியதும்,வேரறுத்ததும் இவ்வாறான படுகொலைகள்தான் என்பதை,நான் கவலையுடன் கூறிக்கொள்கிறேன்.

இந்த நிகழ்வுகளை நடாத்துவதால்,கடந்த கால கசப்புக்கள் தோண்டி எடுக்கப்படுவதாக எவரும் நினைக்கக்கூடாது.தமிழ் மொழியைப்பேசும்நமது வருங்கால தலைமுறைகள்,இத்தவறுகளிலுருந்து பாடம் கற்பதற்கும் இந்த நினைவூட்டல்கள் உதவுமென நான்,நம்புகிறேன்.

எனவே,இந்த ஷுஹதாக்கள் தினநிகழ்வை நடாத்தும் பள்ளிவாசல்கள், நிரவாகிகள், ஊர்ப்பிரமுகர்களுடன் அதே உணர்விலும்,உறவிலும் மற்றும் சமூக விழிப்பிலும், தானும் ஒருவனாக இருக்க விரும்புகிறேன். இந்நிகழ்வில், பங்கேற்கும் ஷுஹதாக்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லாஹுத்தஆலா ஷகீனத் என்ற பொறுமையை வழங்குவானாக என்றும் அமைச்சர் நஸீர்அஹமட் தெரிவித்துள்ளார்.

# உகந்தை மலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம் அலைகடலில் அலைமோதி அடியார்கள் பரவசம்





(உகந்தையிலிருந்து காரைதீவு குறூப்)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் கடந்த (11 )வியாழக்கிழமை மதியம் 11.30 மணியளவில் ஆலயத்திற்கு முன்னாலுள்ள சமுத்திரத்தில் மிகச்சிறப்பாக இடம் பெற்றது.

ஆலய பிரதம சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்களின் தலைமையில், ஆலயத்தில் சுன்னம் இடித்து, கிரியைகள், அபிசேகம் பூஜைகளுடன், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு தீர்த்தோற்சவம் இடம்பெற்றது..

வரலாறு காணாத வகையில் மூவினங்களைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் அடியார்கள் கலந்து கொண்டனர்.

காடு, கடல், மலைகளில், அடியார்கள் மிகவும் நெருக்கமாக நின்றவாறு அலைகடலில் தீர்த்தமாடினர். தேவார பாராயணங்கள் பாடி, மங்கள வாத்தியங்கள் முழங்க ஆயிரக்கணக்கான அடியார்கள் சகிதம் ஆலய வலம் வந்து, சமுத்திரத்தை அடைந்தார் பெருமான். அங்கு விஷேடமாக அமைக்கப்பட்ட வேப்பிலை பந்தலில் முருகப் பெருமானுக்கும் ,வேலுக்கும் விஷேட பூஜை வழிபாடுகள், அபிசேகம் நடைபெற்றன. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் ,உதவிக்குரு சிவசிறி கோபிநாத சர்மா உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் கிரியைகளை சிறப்பாக நடாத்தினர்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சங்கல் பத்தில் இருந்தார்.

பொலிஸார், பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபட்டனர்.

# உளநலம் பேணலின் முக்கியத்துவம் குறித்து மணவர்களுக்கு விழிப்புணர்வு

(கிண்ணியா தினகரன் நிருபர்)



இலத்திரனியல் சாதனங்களுக்கு அடிமையாதல் மற்றும் உளநலம் பேணலின் முக்கியத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில், தி/கிண்/அல்ஹிரா மு.ம.வி இல் நடைபெற்றது.

கிண்ணியா தள வைத்தியசாலையின் உளநலப் பிரிவினால் நடத்தப்பட்ட இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில், தி/ அல்ஹிரா முஸ்லிம் மகாவித்தியாலய ஒன்பதாம் தர மாணவிகள் பங்கேற்றிருந்தனர்.

பாடசாலை பிரதி அதிபர் எ.எஸ்.எம். பைரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிண்ணியா தள வைத்தியசாலை உளநலப் பிரிவு வைத்தியர் எ.கே.எஸ். நஸ்மி வளவாளராக கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வின் வழிகாட்டல் ஆலோசனைப் பொறுப்பாளர் எ.டபிள்யூ.எம். கியாஸ் ஆசிரியர் நெறிப்படுத்தினார்.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிவரும் நிந்தவூரைச்சேர்ந்த எம் பி.எம். சுபியான் சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர்இ கடந்த 2017ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக சித்தி பெற்ற 104 பேரில்இ 15 ஆவது இடத்தைப் பெற்றிருந்தார். உதவித் தேர்தல் ஆணையாளராகவும் இவர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமாணி பரீட்சையில் சித்தியடைந்ததுடன், அநுராதபுர மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றினார்.

தற்போது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றிவரும் இவர், தனது ஆரம்பக்கல்வியை நிந்தவூர் அல்மதீனா வித்தியாலத்திலும் உயர் கல்வியை நிந்தவூர் அல் அஸ்ரக் தேசிய பாடசாலையிலும் பல்கலைக்கழக கல்வியை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்திலும் (சமூகவியல் விசேட கற்கை) பூர்த்தி செய்துள்ளார்.

இதேவேளை, நிந்தவூர் வரலாற்றில் முதலாவது உதவித் தேர்தல் ஆணையாளர் என்ற வரலாற்று பதிவினை இவர் பதிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



பல தடைகளைத் தாண்டி கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக சிரேஷ்ட சிவில் நிர்வாக அதிகாரியான ஏ.எல்.எம். அஸ்மி நேற்று (12) கடமைகளை பொறுப்பேற்றார். அலுவலகத்தில் அவர் கடமையை பொறுப்பேற்ற போது பிடிக்கப்பட்ட படம்.
(படம் : நாற்பிட்டிமுனை விசேட நிருபர்)

# ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆராய்ச்சியாளர்களின் தரமும், பல்கலை. தரமும் உயரும்

## பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

ஆராய்ச்சிகளின் முடிவுகள் பிரசுரிக்கப்படும் போது ஆராய்ச்சியாளர்களின் தரமும், பல்கலைக்கழகத்தின் தரமும் உயரும் என தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.10 ஆவது சர்வதேச ஆய்வரங்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்றது. வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் தலைவர் எஸ்.சபீனா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

ஆய்வு அறிக்கையின் நோக்கம் தனிப்பட்ட மதிப்புகளுடன் தொடர்புடைய ஆய்வின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கு பாடத்துக்கு உதவியாகவும், அறிக்கையானது ஆய்வின் உடனடி நோக்கத்தை மட்டுமல்ல, எந்த பெரிய இறுதி நோக்கத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

தேவையான மற்றும் நியாயமான ஆராய்ச்சி மூலோபாயமாக, ஏமாற்றுதல் அல்லது தகவல்களைத் தடுத்து நிறுத்துதல் போன்ற ஆய்வில் ஈடுபட்டிருந்தால், ஆய்வறிக்கையின் நோக்கம் குறைந்தபட்சம் சாத்தியமான ஏமாற்று அல்லது தகவலைதடுத்து நிறுத்தும் வகையில் எழுதப்பட வேண்டும் என தெளிவுபடுத்தினார்.

## பயன்படுத்தப்படாத காணிகளில்

# பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு தானிய பக்கற்றுக்கள் விநியோகம்

கிண்ணியா தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலயபரிபாலனசபை மற்றும் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கு மரக்கறி மற்றும் தானிய விதைப்பக்கற்றுக்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (10) மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது. பயன்படுத்தாமலிருக்கும் காணிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு உணவு உற்பத்தியை மேம்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது.

இதனடிப்படையிலே, இத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆலயம் மற்றும் அறநெறிப்பாடசாலையைச் சார்ந்த வெற்றுக் காணிகளில் குறிப்பிடத்தக்க ஒரு பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக இந்த விதைப்பைக்கற்றுக்கள் வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடு மக்களுக்கு முன்னுதாரணமாக அமையுமென்று மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். பயிர்ச்செய்கை, உற்பத்தி மேற்கொள்வதன் சமகாலத் தேவை தொடர்பில் இதன்போது மாவட்ட விவசாயப் பணிப்பாளர் குகதாசனால் தெளிவுப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் அறநெறி இறுதிப்பரீட்சைக்கான தயார்படுத்தல் கருத்தரங்கும் இதனோடு இணைந்ததாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகம் என்பனவற்றின் ஒருங்கிணைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட இந்து சமயக்கலாசார உத்தியோகத்தர் இலக்குமி தேவி, ஆலயப் பரிபாலனசபை நிர்வாகிகள், இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்





(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

கிழக்கில் மிகவும் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் வியாழக்கிழமை (11) காலை ஆலய முன்றலில் அமைந்துள்ள தீர்த்தக்குளத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கடந்த (02) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இவ்வாலயத்தின் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெற்றன. புதன்கிழமை (10) இரவு திருவேட்டைத்திருவிழா இடம்பெற்றத்தைத் தொடர்ந்து, வியாழக்கிழமை கலீலை மூல மூர்த்தியாகிய முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் மயில் வாகனத்திலும், பிள்ளையார் மூசுக வாகனத்திலும், சிவன் உடன்உறை பார்வதி சமேதராய் இடபவாகனத்திலும். உள்வீதி, வெளி வீதி வலம் வந்து, வியாழக்கிழமை காலை, தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வருடத்திற்கான திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

# திருகோணமலையில் வறிய குடும்பத்திற்கு வீடு கையளிப்பு

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்



சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட நான்காவது வீடு திருகோணமலை உதயபுரி பிரதேசத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம உத்தியோகத்தர் நாகலிங்கம் ஜெயகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீட்டினை திறந்து வைத்தார்.

இவ்வீடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் நேரடி கண்காணிப்பில், சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டத்தில் வசிக்கும் சுவிஸ் மன்ற சக்திகளான திரு,திருமதி ஸ்ரீதரன் சுயமதி குடும்பத்தினர் மற்றும் அவர்களது பிள்ளைகளின் நிதியனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வறிய குடும்பத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட இவ்வீடானது ஆதிபராசக்தி அறப்பணி மையத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட நான்காவது வீடு என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கட்டாக்காலி மாடுகளால் விபத்துச்சம்பவங்கள் அதிகரிப்பு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதால்,வீதியில் பயணிப்போர் விபத்துக்களுக்குள்ளாகி வருகின்றனர். கல்முனை மாநகர சபை இக் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை இல்லாதொழிப்பதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக்காலமாக கல்முனை நகர் பகுதி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்குமாக நடமாடிவருகின்றன.

வீதியின் நடுவில் படுத்துறங்குவதும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதுமாக மாடுகள் அலைவதனால் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகி, விபத்துக்களுக்கும் ஏற்படுகின்றன. அத்துடன் பாதையோரங்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் இக்கட்டாக்காலி மாடுகளால் ஆபத்துக்களையும் சந்திக்கின்றனர்.

கடந்த காலங்களிலும் கல்முனை மாநகரசபையினால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த பல்வேறு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

இருந்த போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை நகர் பகுதியில் நடாடும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த கல்முனை மாநகர சபை இறுக்கமான சட்டங்களை நடைமறைப்படுத்துவதுடன். கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மூத்த ஓய்வு நிலை அதிபர் தங்கராஜா காலமானார்

( காரைதீவு குறூப் நிருபர் )



காரைதீவின் மூத்த ஓய்வு நிலை அதிபரும், பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலய தர்மகத்தாவுமான இளையதம்பி தங்கராசா நேற்று முன்தினம் (11) தனது,92 ஆவ வயதில் காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இ. தங்கராசா சமூக வாழ்வில் தன்னை பூரணமாக ஈடுபடுத்திக் கொண்ட ஒரு சமாதான நீதிவானாவார்.

காரைதீவிலுள்ள பல பொது அமைப்புகளிலும் தலைமை தாங்கிய இவர், பல வழிகாட்டல்களை செய்த, ஒரு முன்மாதிரி தலைவராவார்.


இவர் ,முன்னாள் காரைதீவு கிராம சபை அக்கிராசனரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினராகவும், வளர்ந்தோர் கல்வி அதிகாரியாகவும் இருந்து காரைதீவுக்கு பல சேவைகளை ஆற்றிய மறைந்த இ.விநாயகமூர்த்தி யின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் தகனக்கிரியை, நாளை (14) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு முப்பது மணி அளவில் காரைதீவு இந்து மயானத்தில் நடைபெறும் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.




சீரற்ற காலநிலை

# பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைப்பது தொடர்பில் ஆராய்வு





சீரற்ற காலநிலை காரணமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தில் சேதமடைந்த இடங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைய நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் வழிகாட்டலின் பேரில், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மற்றும் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிரி கருணாவர்தன, இடர் முகாமைத்துவ நுவரெலியா பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் ஆகியோரின் தலைமையில் கண்காணிப்பு வேலைத்திட்டம் இடம்பெற்றது.

சீரற்ற காலநிலை காரணமாக ஹற்றன் நல்லதண்ணி வீதியில் சேதமடைந்த இடங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், அந்த இடங்களை புனரமைப்பது தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, நுவரெலியா, கொத்மலை ஆகிய பிரதேச செயலகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் காணாமல் போயுள்ளனர். இதன் காரணமாக 641 குடும்பங்களைச் சேர்ந்த 2391 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

## மூவர் தப்பியோட்டம்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை அப்பில் பாம் பகுதியில் இயற்கை வனபகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐவருக்கும் அதிகம் கொண்ட குழுவில் இருவரை வன இலாகா அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (11) மாலை கைது செய்து இராகலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதில் ஹைபொரஸ்ட் மற்றும் டியநில பகுதியை சேர்ந்த 58, மற்றும் 60 வயதுகளையுடைய இருவர் ஸ்தலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் தப்பியோடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் அவர்களை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆ.ரமேஸ்

# அரிய வகை பறவை மீட்பு

வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிய வகை கிளியொன்றை, வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மாத்தளை களுதாவளை பிரதேசத்தில் மீட்டெடுத்துள்ளனர்.

வனஜீவராசி அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, கடந்த 9ஆம் திகதியன்று அவ்வீட்டை சுற்றிவளைத்த அதிகாரிகள், கிளியை மறைத்து வைத்திருந்தவரையும் கைது செய்துள்ளனர். அவரை மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மாத்தளை மாவட்டத்தைப் பொருத்தவரையில் இவ்வாறான கிளியொன்றை முதல் தடவையாக தாங்கள் மீட்டெடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாதயாத்திரிகர்களால் சூழல் மாசு

குமண தேசிய வனத்தின் பிரதான நுழைவாயிலிருந்து சிறிய கெபிலித்த தேவாலயம் வரையான 18 கிலோ மீற்றர் தூரத்தின் இரு புறங்களும் பாதயாத்திரிகர்களால் மாசடைந்துள்ளதாக குமண தேசிய வன பொறுப்பாளர் ஆர்.ஏ.டி.டி சமரநாயக்க தெரிவித்தார்.

உக்காத பொலித்தீன், பிளாஸ்டிக் உள்ளிட்ட 5 தொன் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டதென குமண தேசிய வனத்தின் பொறுப்பாளர் ஆர்.ஏ.டி.டி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் புனித பூமிக்கு பாதயாத்திரை மூலம் செல்லும் யாத்திரிகர்களுக்காக கடந்த 15 நாட்களும் தேசிய வனப்பகுதி திறக்கப்பட்டதன் பின்னர், இவ்வாறு கழிவுகள் சேகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3 நாட்களாக கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு மேலதிகமாக 200 இராணுவத்தினரும் இந்த பணியில் ஈடுபட்டதாகவும் யுனிசெலா நிறுவனம் இதற்கான முழு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குமண தேசிய வனத்தின் ஊடாக ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 5ஆம் திகதி வரை 28,838 யாத்திரிகர்கள் கதிர்காமத்துக்கு சென்றிருந்தனர்.

இவ்வாறு சென்ற யாத்திரிகர்களால் வீசப்பட்ட கழிவுகளில் அழிக்கக்கூடிய கழிவுகள் வனப்பகுதிக்குள்ளே அழிக்கப்பட்டதாகவும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் வனத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பாதயாத்திரிகர்கள் இரவுப்பொழுதைக் கழித்த பாகுராவ மற்றும் மடமெதொட்ட பகுதிகளிலிருந்தே அதிகமான கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையக கல்வி தொடர்பில் கல்வியமைச்சருடன் ம.ஆ.முன்னணி கலந்துரையாடல்

இறக்குவானை தினகரன் நிருபர்

மலையக ஆசிரியர் முன்னணிக்கும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கல்வியமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த 10 ஆம் திகதி கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதில் மலையக கல்வி தொடர்பான பல்வேறு குறைப்பாடுகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அதற்கமைய மிக விரைவில் அதிபர் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்வதற்காக போட்டிப்பரீட்சை ஒன்றின் ஊடாக அதிபர் பதவிகள் நிரப்பப்படவுள்ளன, அந்த அதிபர் பதவிகள் விகிதாசார அடிப்படையிலேயே நிரப்பப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் நியமனத்தை விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கான தகவல்களை மாகாண கல்வி அமைச்சின் ஊடாக பெற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் மிக விரைவில் எடுக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. கல்வியற்கல்லூரிகளை ஒரு பல்கலைக்கழகமாக அல்லது பட்டம் பெற்ற ஆசிரியர்களை வெளியேற்றும் இடமாக மாற்றுவதற்கு மிக விரைவில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் அனுமதி பெறுகின்ற ஆசிய மாணவர்களை வெளியேறுகின்ற பொழுது கல்வி இளமாணி பட்டத்தோடு வெளிவருவதற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படவுள்ளதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் பெயர் பலகையிலும் 'முகப்பு வாயிலூடாகவும் மட்டும் காணப்படும் தேசிய பாடசாலைகளை முழுமையாக உள்ளீர்த்து உயர் தரத்திற்கு தேவையான விஞ்ஞான,கணித, தகவல்தொடர்பாடல், தொழில்நுட்ப பாட ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மீண்டும் மாணவர்களுக்கு போஷாக்கு திட்டத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் போதியளவு தரவுகள் இன்றி தேவைப்பட்டியல் இன்றி கல்வியற்கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை உள்வாங்குகின்ற விடயம் தொடர்பிலும் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஆகவே மாகாணத்தில் தேவையான ஆசிரியர்களை இனம் கண்டு அனுப்புவதற்கான செயற்பாட்டு ரீதியான வேலைத்திட்டம் முன்வைக்கப்படுமென மேலதிக கல்வி செயலாளர் புஷ்பகுமார தெரிவித்தார்.

# இரத்தினபுரியில் அதிகரிக்கும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு

இரத்தினபுரி சுழற்சி நிருப

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு காரணமாக பிரதேச ஆற்றங்கரைகள் அரிப்புக்குள்ளாகி உணவுப்பயிர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

விசேடமாக இரத்தினபுரி மாவட்டத்தை ஊடறுத்து ஓடும் வளவை கங்கை, களு கங்கை ஆகிய ஆறுகளின் இரு கரையோரங்களின் கிளையாறுகளிலும் இந்நிலைமை பாரதூரமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் ஆற்றங்கரைகளின் இரு மருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டு ஆற்றின்கரைகள் விரிவடைந்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் ஓடும் பெலிஹுல் ஓயா ஹிரிகட்டு ஓயா, ஹுலுஓயா மற்றும் கிளை ஆறுகளின் நிலையும் இவ்வாறாகவே காணப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமைகளுக்கு ஆறுகளின் வெள்ளப்பெருக்குகள் மாத்திரமின்றி மழையற்ற காலப்பகுதிகளில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு போன்ற சட்டவிரோத மனிதச் செயற்பாடுகளும் சுற்றாடல் பாதிப்புக்களுக்கு காரணமாக அமைவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளுடன் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் வலியுறுத்துகின்றனர்.







ஆடித் திருவிழாவை முன்னிட்டு பசறையில் தேர்கள் வீதி உலாவருவதை படத்தில் காணலாம்.

படம்: பதுளை தினகரன் நிருபர்

# இலங்கையில் உலக ஆதிவாசி தின நிகழ்வுகள்

ஹாலிஎல விசேட நிருபர்



உலக ஆதிவாசி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆதிவாசி தின விழா தம்பன கொடபாகினிய, மொரபெத்த கிராமத்தில் நடைபெற்றது நிறைவடைந்தது.

இந்த ஆண்டுக்கான ஆதிவாசி தினக் கொண்டாட்டத்தின் தொனிப்பொருள் "பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல் மற்றும் பரப்புவதில் ஆதிவாசி பெண்களின் பங்கு" என்பதாகும், புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் பழங்குடி தலைவர் ஊருவரிகே திசாஹமியின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய பின்னர் இவ்விழா ஆரம்பமானது.

ஆதிவாசி தலைவர் விஸ்வ கீர்த்தி வனஸ்பதி உருவரிகே வன்னிலத்தோ மற்றும் இந்நிகழ்வில் நீல்கலை, ரதுகல, பொல்லேபெத்த, தம்பன, ஹெனானிகல, வாகரே ஆகிய ஆதிவாசி கிராமங்களின் தலைவர்கள் உட்பட ஆதிவாசிகள் குழுவொன்று கலந்து கொண்டதுடன், ஆதிவாசிகளின் பாரம்பரியமிக்க பல கலாசார கூற்றுகளுடன் நிகழ்வு அழகுப்படுத்தப்பட்டது.

ஆதிவாசி தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற ஆதிவாசி வாரிய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய மகஜர் ஒன்றும் ஆதிவாசிகளின் தலைவர் உருவரிகே வன்னிலத்தோ அவர்களினால் புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இங்கு சுற்றுச்சூழல் நீதிமையத்தினால் எழுதப்பட்ட "வெதி பச" புத்தகமும் வழங்கப்பட்டதுடன், ஆதிவாசிகளுக்கு உலர் உணவுப் பொருட்களும் பரிசாக வழங்கப்பட்டன.

நாவலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்



கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆடி முருகவேல் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. முருகனின் வேலுக்கு அனுக்கிரகம் வேண்டி பூஜை நடைபெற்ற பின் பக்தர்கள் காவடி, பால்குடம், பன்னீர் காவடி எடுத்து நகர் வலம் சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தனர். வெள்ளிக்கிழமை காலை அலங்கார சித்திரைத்தேரில் வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் தேரில் நகர் வலம் செல்வதையும் காணலாம்.

# ஜனாதிபதி ரணில் தலைமையில் நாடு அபிவிருத்தியடையும்

## வாழ்த்துச் செய்தியில் களுத்துறை நகர பிதா ஆமிர் நஸீர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்கள் இன்று அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளதாகவும் நிச்சயம் புதிய ஜனாதிபதி நாட்டை எல்லாத்துறையிலும் அபிவிருத்தி அடையச்செய்வார் என்பதில் பூரண நம்பிக்கையிருப்பதாகவும் களுத்துறை நகர சபை நகர முதல்வர் டொக்டர் ஆமிர் நஸீர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீண்ட கால அரசியல் அனுபவத்தைக் கொண்டவர். பாராளுமன்ற உறுப்பினராக அரசியலை ஆரம்பித்த அவர் பல தடவைகள் ஐ.தே.கவின் ஆட்சிக்காலத்தில் பல அமைச்சு பதவிகளை வகித்த அனுபவம் கொண்டவர். அதன் பின் எதிர்க்கட்சி தலைவராக, நாட்டின் பிரதமராக பல தடவைகள் பதவி வகித்து இன்று நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு அரசியலில் நீண்ட அனுபவத்தைக் கொண்ட ஜனாதிபதியொருவர் எமக்கு கிடைத்திருப்பதானது நாட்டு மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகவே நான் பார்க்கிறேன்.

அதலபாதாளத்தில் விழுந்த நாட்டை எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி பொறுப்பேற்று குறுகிய காலத்திற்குள் சில மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார். அதேபோல், சிறந்ததொரு அமைச்சரவையையும் உருவாக்கி நாட்டை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தையும் வகுத்து செயற்பட ஆரம்பித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களுக்கு அரசியல் கட்சிகள் பேதங்களை மறந்து ஆதரவளிக்க முன்வந்துள்ளதை வரவேற்று பாராட்டுகின்ற அதேநேரம், ஜனாதிபதியின் செயற்பாடுகள் வெற்றியளிக்க தனது பூரண ஆதரவை வழங்குவதாகவும் நகர பிதா ஆமிர் நஸீர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.



## கலாபூஷணம் ஸகியா சித்திக் பரீட்டின் "நமது வரலாற்று ஆளுமைகள்" நூல் வெளியீட்டு விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பிரபல எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான கலாபூஷணம் ஸகியா சித்திக் ஃபரீட் எழுதிய "நமது வரலாற்று ஆளுமைகள்" (பகுதி 1) எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு 10, தபால் தலைமை கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம், முஜிபுர் ரஹ்மான், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எஸ்.எம்.மரிக்கார், அப்துல் ஹலீம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்டீன், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எம். நஹியா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசாரப் பணிப்பாளர் இப்ராஹீம் அன்ஸார், மாத்தளை சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் புவாஜி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

நூல் பற்றிய ஆய்வுரையை டாக்டர் ரவூப் ஷெய்ன் நிகழ்த்துவதோடு, நூலின் முதல் பிரதியை மூஸான் இன்டர்நெஷனலின் தலைவர் முஸ்லிம் சலாஹுடீன் பெற்றுக் கொள்வார்.

நிகழ்வை வசந்தம் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் முஹம்மட் இர்பான் தொகுத்து வழங்குவார்.

அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள இந்நிகழ்வில், எவரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.



இனிய நந்தவனம் ஆகஸ்ட் மாத விவசாய சிறப்பிதழை அதன் ஆசிரியர் சந்திரசேகரன் தலைமையில் தொழிலதிபர் சாதிக்பாட்சா இந்தியா திருச்சியில் வெளியிட்டு சிறப்பித்தார். தமிழறிஞர் விஜய் சீத்தாராமனும் அருகில் காணப்படுகிறார்.



கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் 2020/2021 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிகளுக்கு பரிசு மற்றும் கௌரவிப்பு வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொழும்பு கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் எம். எச். பேகம், சிறப்பு விருந்தினர் எம்.செந்தில்நாதன்(வீரகேசரி நிறுவன பிரதம செயற்பாட்டு அதிகாரி), லலிதா ரவீந்திரராஜா (கல்லூரி அதிபர்), ஸ்ரீ பிருந்தன் (இசை இயக்குனர்), சந்திரகலா ஸ்ரீ ரமணா (பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் ) ஆகியோர் மாணவிகளுக்கு கேடயம் வழங்கினார்கள்.

## பாலியல் குற்றங்களுக்கு ஆப்கானில் கசையடி வாக்குறுதி மீறப்பட்டிருப்பதாக ஐ.நா. கவலை



சட்டவிரோத பாலியல் தொடர்பு குற்றச்சாட்டின் பேரில் மூன்று பெண்கள் மற்றும் ஒரு ஆணுக்கு பொது இடத்தில் வைத்து கசையடி வழங்கப்பட்டதாகவும் இச் சம்பவம் ஆப்கானிஸ்தானில் சூபுல் மாகாணத்தில் நிகழ்ந்திருப்பதாகவும் ஆப்கான் செய்தி நிறுவனமான காமா தகவல் வெளியிட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னர் கந்தஹார் பகுதியில் திருட்டு, கூடா பாலியல் தொடர்புகள் குற்றச்சாட்டுகளின் பேரில் தலிபான்களால் கைது செய்யப்பட்ட மூவருக்கு 39 பகிரங்க கசையடிகள் வழங்கப்பட்டன. ஆப்கானிய நீதித்துறையில் தலிபான் நிர்வாகம் கொண்டு வந்திருக்கக் கூடிய சீர்திருத்தங்களுக்கு அமைய இவ்வாறான பகிரங்க தண்டனைகள் தவிர்க்க முடியாதவையே என இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆப்கான் சட்ட அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதன் பின்னர் கடந்த ஓகஸ்ட் 17ம் திகதி டோஹாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தலிபான் தரப்பு ஷரியா சட்டத்துக்கு அமைவாக பெண் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் பெண்களுக்கு எதிராக வன்முறை மற்றும் பாகுபாடு காட்டப்படமாட்டாது என்றும் உறுதியளித்திருந்தது என்ற தகவலை ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா. உதவும் குழு கடந்த பத்துமாத கால கண்காணிப்பில் திரட்டப்பட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. தலிபான் ஆட்சியில் பெண் உரிமைகள் படுமோசமாக மீறப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பெண்கள் அனுபவித்து வந்த கல்வி, தொழில் மற்றும் பொதுவாழ்வில் அனுபவித்த உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அல்லது முற்றாக மறுக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனாவில் அரபு வசந்தத்தை ஒத்த மக்கள் புரட்சிக்கு வாய்ப்பு



அரபு வசந்தத்தை ஒத்த மக்கள் புரட்சி சீனாவில் வெடிக்கலாம் என்றும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சீன ஜனாதிபதி ஸிஜின்பிங் அச்சமடைந்திருப்பதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் பரவலாகக் காணப்படும் சமத்துவமின்மை மற்றும் ஊழல் ஆகியவற்றைப் பயன்படுத்தி வெளிநாட்டு சக்திகள் மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டலாம் எனவும் இதற்கு எதிராக ஒட்டுமொத்த சீன சமூகமும் கிளர்ந்தெழ வேண்டும் எனவும் ஜனாதிபதி விரும்புகிறார் என இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அவரால் 'வர்ண புரட்சி' எனக் குறிப்பிடப்படும் இம் மக்கள் எழுச்சியில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிடி தளரலாம் என ஜனாதிபதி எதிர்பார்ப்பதால் ஒரு புதிய படையணியை உருவாக்குவதில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

பராக் ஒபாமாக காலத்தில் வொஷிங்டனுக்கு விஜயம் செய்திருந்த சீன ஜனாதிபதி, ஜனநாயக சுதந்திரம் என்ற பெயரில் மேற்குலக சக்திகள் சீனர்களைத் தூண்டிவிடக் கூடும் என்ற அச்சத்தை வெளியிட்டிருந்தார் என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் மைய நீரோட்டத்தில் இருந்து விலகிச் செல்லக்கூடிய உள்ளூர் சக்திகளை மக்கள் எழுச்சிக்கு பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக சீன ஜனாதிபதி கருதுவதாக முன்னாள் சிரேஷ்ட அமெரிக்க இராஜதந்திரியான டேனியல் ரஸல் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இச்சக்திகளை அரசியல், தொழில்நுட்ப, பொருளாதார, சமூக மற்றும் இராணுவ ரீதியாக எதிர்க்கக்கூடிய ஒரு பலமான வலயத்தை சீன ஜனாதிபதி உருவாக்கி வருவதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்க சபாநாயகர் நன்ஸி பெலொசியின் தாய்வான் விஜயத்தின் போது சீனா காட்டிய கடும் எதிர்ப்பு, சீன ஜனாதிபதியின்ன மக்கள் எழுச்சி தொடர்பான அச்சத்தையே காட்டுவதாகவும் இத் தகவல்கள் மேற்கோள் காட்டியுள்ளன.

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1.2 பில்லியன் டொலர்களை எதிர்பார்க்கும் பாகிஸ்தான்



சர்வதேச நிதியத்தில் இருந்து 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் கிடைக்கும் என பாகிஸ்தான் அரசு எதிர்பார்த்திருந்தாலும் அதற்கான முடிவை எடுக்கும் உயர் மாநாடு நடைபெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை என பாக். அரசியல் வட்டாரங்களில் சந்தேகம் காணப்படுகிறது. இக்கடனை வழங்குவதற்கு முன்னர் தனக்கு கடன் வழங்கக் கூடிய நட்பு நாடுகளிடமிருந்து புதிய கடன்களைப் பெற்று துண்டு விழும் தொகையை பாகிஸ்தான் இட்டு நிரப்ப வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாக இவ் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சவூதி அராபியா, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு குடியரசு ஆகிய மூன்று நாடுகளும் பாகிஸ்தானின் கடன் வழங்கும் நட்பு நாடுகளாகும். இந்நாடுகள் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை பாகிஸ்தானுக்கு துண்டு விழும் தொகையை இட்டு நிரப்புவதற்காக வழங்கத் தயார் என்ற வாக்குறுதியை சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கும்படி பாக். அரசு இந்நாடுகளை தூண்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதேசமயம் கடந்தவாரம் ஐக்கிய அரபு குடியரசின் தூதுவர் பாக். நிதியமைச்சர் மிப்டா இஸ்மாயிலை இஸ்லாமாபாத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பாகிஸ்தானில் அந்நாடு முதலீடு செய்யக் கூடிய வாய்ப்புகள் பற்றி அவர் தூதுவரிடம் எடுத்துரைத்தார். பாகிஸ்தானின் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கங்களை ஐக்கிய அரபு குடியரசுக்கு விற்பதன் மூலம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்ட முடியும் என இஸ்லாமாபாத் நம்புகிறது.

பாகிஸ்தான் ரூபா தற்போது 30 சதவீத மதிப்பை இழந்துள்ளது. இதேசமயம் சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளுக்கு அமைய பெட்றோலிய பொருட்கள் மீதான வரி அதிகரிப்பு, மின்சாரக் கட்டளை அதிகரிப்பு, வட்டி வீத அதிகரிப்பு என்பனவற்றை பாக். அரசு மேற்கொண்டுள்ளது. இதையடுத்தே ஓகஸ்ட் மாதம் நாணய நிதியம் 1.2 பில்லியன் டொலர்களை விடுவிக்கும் என அந்நாடு எதிர்பார்த்திருந்தாலும் அது சாத்தியமாவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை என பாக். நிதித்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

# 'சர்வதேச லீக் டி20' தொடரில் தசுன் சானக்கவும் இணைவு

ஐக்கிய அரபு இராச்சியத்தின் சர்வதேச லீக் டி20 தொடரில் இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்கவும் இணைந்துள்ளார்.

இதில் கிரோன் பொலார்ட், ட்வாயன் பிராவோ மற்றும் நிகொலஸ் பூரன் ஆகிய மேற்கிந்திய தீவுகளின் முன்னணி வீரர்கள் மற்றும் இங்கிலாந்தின் ஒலி பொப் மற்றும் ஆப்கானின் பஸால்ஹக் பாரூக் ஆகியோரின் பெயர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.



ஆறு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ளது. ஏற்கனவே இந்தத் தொடரில் விளையாடுவதற்கு 8 இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி, இலங்கையின் வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர, பானுக்க ராஜபக்ஷ, லஹிரு குமார, சீகுகே பிரசன்ன, சரித் அசலங்க, இசுரு உதான மற்றும் நிரோசன் திக்வல்ல ஆகிய வீரர்களின் பெயர்கள் இந்தத் தொடரில் இடம்பெற்றுள்ளன.

2023ஆம் ஆண்டு தொடரில் 34 போட்டிகள் இடம்பெறவுள்ளன. அனைத்து அணிகளும் மற்றைய அணியுடன் இரண்டு போட்டிகளில் விளையாடவிருப்பதோடு, தொடர்ந்து இறுதிப் போட்டி உட்பட நான்கு பிளே ஒப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. போட்டிகள் டுபாய், அபூதாபி மற்றும் ஷார்ஜாவில் நடைபெறும்.

அதேநேரம் சர்வதேச லீக் டி20 தொடரில் பங்குபெறவிருக்கும் அணிகளின் உரிமையாளர்கள் பெரும்பாலும் இந்தியாவினைச் சேர்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக, இந்த தொடரில் பங்கெடுக்கும் பாகிஸ்தான் அணி வீரர்கள் மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இருக்கும் அரசியல் பதற்றம் காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக தேசிய விளையாட்டு சபை விசாரணை

தேசிய விளையாட்டுச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் குறித்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளார்.



இலங்கையில் நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்த ஆசிய கிண்ண தொடரை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மாற்றி இருப்பதற்கான காரணம் பற்றியே சபை விசாரணை நடத்தவுள்ளது.

இந்த விசாரணை நடத்தப்பட்டு அதன் அறிக்கை விளையாட்டுத் துறை அமைச்சருக்கு கையளிக்கப்படும் என்று உலகக் கிண்ணம் வென்ற இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 2022 ஆசிய கிண்ணத்தை நடத்துவதற்கான வாய்ப்பை இலங்கை கிரிக்கெட் தவறவிட்டது குறித்து விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஏற்கனவே அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானுடனான போட்டிகளை நடத்திய நிலையில் இந்தத் தொடரை நடத்துவதற்கான வழி ஒன்றை இலங்கை கிரிக்கெட் கண்டறிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். தொடரை நடத்துவதற்கான வழியை கண்டறிவதில் இலங்கை கிரிக்கெட் ஏன் தவறியது என்று கேள்வி எழுப்பிய விளையாட்டுத் துறை அமைச்சர், நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள இலங்கை பொருளாதாரத்திற்கு கிரிக்கெட் தொடர்கள் மூலம் தேவையான பணத்தை கொண்டுவர முடியும் என்றும் குறிப்பிட்டார்.




தேசிய கராத்தே சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 12ஆவது தேசிய கராத்தே போட்டிகளில் பங்கு பற்றிய வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலய மாணவன் அரபாத் மொஹமட் அதீப் 8ஆவது பிரிவில் 2 தங்கப்பதக்கங்களை வென்றார். இவர் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தின் போசகரும் கிரிக்கெட் வீரருமான யாசீர் அரபாத் மற்றும் பாத்திமா ஆகியோரின் புதல்வராவார்.

(படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)




அட்டாளைச்சேனை தைக்காநகர் எவர்டெப் விளையாட்டுக் கழகத்தின் உதைப்பந்தாட்ட வீரர்களுக்கான 2022ஆம் ஆண்டுக்கான புதிய சீருடையினை அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம். அஜ்வத் வீரருக்கு வழங்கி வைப்பதையும், அருகில் கழகத்தின் முன்னாள் தலைவரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எல். அஜ்மல் நிற்பதையும் காணலாம்.

(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# இங்கிலாந்து பயணித்த பாக். வீரர்களும் மாயம்



இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்ற பொதுநலவாய போட்டியில் பங்கேற்கச் சென்ற இரு பாகிஸ்தான் குத்துச்சண்டை வீரர்கள் காணாமல்போயுள்ளனர். சுலைமான் பலொக் மற்றும் நசீருல்லா ஆகிய வீரர்கள், அணியினர் பாகிஸ்தான் திரும்புவதற்கு சில மணி நேரம் இருக்கும்போது காணாமல்போயிருப்பதாக பாகிஸ்தான் குத்துச்சண்டை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை முடிவுற்றதோடு காணாமல்போன வீரர்களின் கடவுச்சீட்டு உட்பட பயண ஆவணங்கள் சம்மேளன நிர்வாகத்திடமே தொடர்ந்தும் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே, பாகிஸ்தான் ஒலிம்பிக் குழு குத்துச்சண்டை வீரர்கள் காணாமல் போன விவகாரம் குறித்து விசாரிக்க நான்கு பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பளுதூக்குதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகியவற்றில் இரண்டு தங்கம் உட்பட 8 பதக்கங்களை வென்ற பாகிஸ்தான் குத்துச்சண்டையில் எந்தப் பதக்கத்தையும் வெல்லவில்லை. ஏற்கனவே பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கச் சென்ற இலங்கை வீரர்கள் மற்றும் அதிகாரிகள் என பத்துக்கும் அதிகமானவர்கள் இங்கிலாந்தில் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்தில் காணாமல்போன இரு கரப்பந்து வீரர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

இங்கிலாந்தின் பெர்மிங்ஹாம் நகரில் முடிவுற்ற 22ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று அங்கு காணாமல்போன இலங்கை கடற்கரை கரப்பந்து (ஆண்கள்) அணி வீரர்கள் இருவருக்கும் எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடத்துவதற்கு மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளன நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய அந்த ஒழுக்காற்றுக் குழுவின் தலைவர் பதவிக்காக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரான இலங்கை கடற்கரை கரப்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவர் பிரியந்த ஜயகொடி நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் நிமல் பெரேரா மற்றும் அதன் போட்டிக் குழு செயலாளர் தனபால ஜயபத்ம ஆகியோர் அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

பெர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்றிருக்கும்போது காணாமல்போயிருக்கும் இந்த வீரர்கள் தெற்காசிய மற்றும் ஆசிய சம்பியன் கடற்கரை கரப்பந்தாட்ட பதக்கங்களை வென்ற மலிந்த யாபா மற்றும் அஷேன் பண்டார ஆகியோராவர்.

எவ்வாறாயினும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்ற இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு இங்கிலாந்தில் தங்கி இருப்பதற்காக ஆறு மாத கால விசா கிடைத்துள்ளது.

அந்நாட்டில் காணாமல் போயிருப்பதாக சந்தேகிக்கப்படும் வெளிநாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக விசா செல்லுபடிக் காலம் முடிவுற்ற பின்னரே விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று இங்கிலாந்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# உலகக் கிண்ண கால்பந்து: ஒருநாள் முன்னதாக ஆரம்பம்



கட்டாரில் நடைபெறவுள்ள பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டி திட்டமிட்டதை விடவும் ஒருநாள் முன்னதாக நவம்பர் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. முதல் போட்டியில் கட்டார் மற்றும் ஈக்வடோர் அணிகள் மோதவுள்ளன.

போட்டியின் ஆரம்ப நிகழ்ச்சியையும் போட்டியை ஏற்று நடத்தும் நாட்டின் முதல் ஆட்டத்தையும் ஒரே நாளில் நடத்த உலக கால்பந்து சம்மேளனம் ஒருமனதாக ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து திகதி மாற்றப்பட்டுள்ளது.

போட்டியின் முதல் ஆட்டத்திற்கு முன்னதாக ஆரம்ப நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். அதில் போட்டியை ஏற்று நடத்தும் நாடு பங்குபெறும்.

இதற்கு முன்னர் நவம்பர் 21ஆம் திகதியன்று ஆரம்ப நிகழ்ச்சிக்குப் பின்னர் கட்டாரும் ஈக்குவடோரும் மோதவிருந்தன.

ஆனால் அதற்கு முன்னர் வேறு இரு ஆட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன.

ஆரம்ப நிகழ்ச்சி மற்றும் முதல் போட்டி 60,000 ஆசனங்கள் கொண்ட அல் பைத் அரங்கில் நடைபெறும்.

திகதி மாற்றத்தால் உலகக் கிண்ணப் போட்டி 29 நாட்கள் நீடித்து டிசம்பர் 18ஆம் திகதி நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சக வீரர்களின் இனவெறி தாக்குதல்கள் குறித்து ரொஸ் டெய்லர் வேதனை

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஓய்வு பெற்ற நியூசிலாந்து அணி முன்னாள் தலைவர் ரொஸ் டெய்லர், தனது சுயசரிதையை 'ரொஸ் டெய்லர் பிளக் அண்ட் வைட்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டுள்ளார். அதில் சக வீரர்களாலேயே இனவெறிக்கு ஆளானதாக குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் கூறியுள்ளதாவது: "நியூசிலாந்தில் கிரிக்கெட் என்பது அழகான வெள்ளைக்காரர்களின் விளையாட்டு. அவர்களுக்கு இடையில் நான் பழுப்பு முகமாக இருந்தேன். தடிமனான தோலை நகையாடுவது எளிது. ஆனால், அது சரியான செயலா? உடை மாற்றும் அறைகள் கேலியின் பண்டமாற்று கடைகள் போல் இருந்தன. நியூசிலாந்து மக்கள் என்னை மவோரி அல்லது இந்தியன் என்று நினைத்தனர்.

ஒருமுறை நியூசிலாந்து வீரர் ஒருவர் என்னைப் பார்த்து, 'நீங்கள் பாதி நல்லவர். ஆனால் ரொஸ் நான் எந்த பாதியை குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்கு தெரியவில்லை" என்றார். நான் பாதி வெள்ளை இனத்தைச் சேர்ந்தவன் என்பதால் என்னை பாதி நல்லவர் என்று குறிப்பிடுவது புரிந்தது."

# சிம்பாப்வே தொடரில் இந்திய அணியின் தலைவர் ராஹுல்



சிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இந்திய குழாத்தில் கே.எல். ராஹுல் இணைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த குழாத்தில் சிக்கர் தவான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த போதும், தற்போது அணியின் தலைவராக கே.எல். ராஹுல் பெயரிடப்பட்டுள்ளதுடன், உப தலைவராக சிக்கர் தவான் நியமிக்கப்பட்டுள்ளார்.

கே.எல். ராஹுல் தொடர் நிறைவடைந்த பின்னர், தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சொந்த மண்ணில் நடைபெற்ற டி20 தொடரில் விளையாடியிருந்தார். அதனைத்தொடர்ந்து உபாதைக்கு முகம்கொடுத்திருந்த அவர், பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர் போட்டிகளில் விளையாடவில்லை.

சிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகளும் ஹராரே மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், இந்த தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இந்திய குழாம்: கே.எல்.ராஹுல் (தலைவர்), சிக்கர் தவான் (உப தலைவர்), ருதுராஜ் கைக்வாட் சுப்மான் கில், தீபக் ஹூடா, ராஹுல் திருப்பாதி, இசான் கிஷன், சஞ்சு சம்சன், வொசிங்டன் சுந்தர், சர்துல் தாகூர், குல்தீப் யாதவ், அக்ஷர் பட்டேல், ஆவேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, மொஹமட் சிராஜ், தீபக் சஹார்.**

# ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து சேதம் விளைவித்தவர்களின் புகைப்படங்களை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளதுடன் இவர்களை கைது செய்வதற்கு பொது மக்களின் உதவியை நாடியுள்ளது



# ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து சேதம் விளைவித்தவர்களின் புகைப்படங்களை பொலிஸ் தலைமையகம் வெளிட்டுள்ளதுடன் இவர்களை கைது செய்வதற்கு பொது மக்களின் உதவியை நாடியுள்ளது

